# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜுலை 12 2019. இதழ் - 70











**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்**

பக்கம் - 04



**செயற்திறன் மிக்க அதிரடித் தலைமை?**

இலங்கையில் தமிழர் பிரச்சினை உட்பட .....

பக்கம் - 03



**மட்டக்களப்பில் உலாவந்த மண்ணெண்ணைக் கரத்தைகள்**

மட்டக்களப்பில் ஒரு காலத்தில் கனம் கொண்ட.....

பக்கம் -11



**உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!**

அரசகரும மொழிகள் வாரம் கடந்த 01/07/2019- 05/07/2019...

பக்கம் - 06

## ‘ஒரு லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமை’

### பெண்களும் போதைப்பொருளுக்கு அடிமை



நாடு முழுவதும் 18 வயதிற்கு குறைந்த சுமார் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக தேசிய அளவிலான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் தேசிய அதிகார சபைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பிலான ஜனாதிபதி செயலணி, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பொலிசார் ஒன்றிணைந்து மேற்கொண்ட இந்த ஆராய்ச்சி அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்ததுடன், அவ்வறிக்கையில் 18 வயதிற்கு குறைந்த சுமார் 6100 சிறுவர்கள் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் நாளொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் அளவிலானோர் ஹெரோயின் போதைப்பொருளை தேடி அலைவதாகவும் இந்த

தொடர்ச்சி பக்கம்... 15

## கல்முனை விவகார காலக்கெடு நெருங்குகிறது:

### நம்பிக்கை அளிக்கும் நடவடிக்கை எதுவும் இல்லை



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை பிரதேச சபையை தரமுயர்த்துவதற்காக பல தரப்பினராலும் வழங்கப்பட்ட காலக்கெடு நெருங்கிக் கொண்டிருப்பதாக கல்முனைப் பகுதி வாழ் மக்களும் உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தியவர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரமுயர்த்தித்தருவேன் என்று வாக்குறுதியளித்த வண.ஞானசார தேரருக்கு அதனை நிறைவேற்ற இன்னும் 10 தினங்களே எஞ்சியிருக்கின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த மாதம் 17ஆம் திகதி மேற்படி கோரிக்கையை முன்வைத்து கல்முனையில் ஆரம்பித்த சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை 22ஆம் திகதி கல்முனைக்கு வந்த பொதுபலசேனா அமைப்பின் செயலாளர்

தொடர்ச்சி பக்கம்... 15

## ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி மேலும் கட்சிகள் இணையும்!



(நி.அமிர்தஸன்)

வட மாகாணம், மேல் மாகாணம் மற்றும் மலையகம் ஆகியவற்றை உள்ளடக்கி புதிய அரசியல் கூட்டணி ஒன்று உதயமாகியுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இந்தப் புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் ஆறுமுகன் தொண்டமான், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய அரசியல் கூட்டணிக்கு தலைவர். பொதுச் செயலாளர் என்பது பற்றிய பிரச்சினைகள் இருக்காதென்று முன்னாள் அமைச்சர் ஆறுமுகன்

தொடர்ச்சி பக்கம்... 02




தொடர்ச்சி...

## ஆறுமுகன் தொண்டமான்...........

தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை அரசியலின் எதிர்க்காலத் தேவை கருதி பிரதேச வேபாடுகள் இன்றி புதிய கூட்டணியை அமைக்கத் தீர்மானத்திதுள்ளதாகவும் மேலும் பல கட்சிகள் இணைந்தவுடன் அரசியல் செயற்பாட்டுகள் பற்றி அறிவிக்கப்படுமெனவும் ஆறுமுகன் தொண்டமான் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட பல கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக புதிய அரசியல் கூட்டணிக்கான ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியும் புதிய அரசியல் கூட்டணியில் கட்சிகள் இணைக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் சன் குகவரதன் தலைமையிலான தமிழர் ஐக்கிய இணையமும் இணைந்து செயற்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## தாக்குதல் குறித்து தயாசிறி

சஹ்ரான் எனும் பயங்கரவாதி மற்றும் அவரின் செயற்பாடுகளின் பின்னால் வெளிநாட்டுச் சக்திகள் செயற்படுவதாக தான் நம்புவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் ஐஎஸ் பயங்கவாத அமைப்பு இருப்பதற்கான அறிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லையென அவர் குறிப்பிட்டார்.
பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து எதிர்காலத்தில் இவ்வாறன பயங்வாத செயற்பாடுகள் இடம்பெறாதிருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அவர் கூறினார்.

பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் தயாசிறி ஜயசேகர நேற்று சாட்சியம் அளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

## அரசாங்க பணிகளுக்காக பயன் படுத்தப்படும் காகிதாதிகளை குறைப்பதற்கு திட்டம்

அரசாங்க பணிகளுக்காக பயன்படுத்தப்படுத்தப்படும் காகிதாதிகளை (Stationeries) குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நாளாந்தம் 50 இலட்சம் புகைப்பட பிரதிகள் பயன்படுத்தப்படுவதாக ஆய்விலிருந்து கண்டறியப்பட்டதாகவும் அவர் தெரவித்தார்.

இவற்றை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று அமைச்சர் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை தீர்க்க நடவடிக்கை

பாடசாலை அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை நீக்குவது பற்றி நிதியமைச்சு கவனம் செலுத்தியிருப்பதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
இதுபற்றி தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்றும் பி.சி.பெரேரா சம்பள அறிக்கையின் மூலமே இந்த சம்பள முரண்பாட்டு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டுக்கு அமைவாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதிபர்களின் சம்பளம் 106 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆசிரியர் ஆலோசகர்கள் சம்பள முரண்பாடு குறித்து குறுகிய காலத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என்றும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்



திருகோணமலை மாவட்டத்திற்கென 2019 ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 3038.52 மில்லியன் ரூபா நிதியில் 4209 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 726.74 மில்லியன் பெறுமதியான 1399 வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளதாகவும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 56.77 மில்லியனில் 357 வேலைத்திட்டங்களும் நிறைவு பெற்றுள்ளன.
கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1242.35 மில்லியன் ரூபா நிதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள 2149 வேலைத்திட்டங்களில் 301 நிறைவடைந்துள்ளதுடன், ஏனையவை நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம், விளையாட்டு அபிவிருத்தி, கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டம், மீள்குடியேற்ற வேலைத்திட்டம், சிரிசர பிவிசும உள்ளிட்ட வேலைத்திட்டங்களும் திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கிழக்கு மாகாண சபையின் ஊடாக 639.87 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 401 அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திர வசதி

சிறுநீரக நோய் மற்றும் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்காக வீடுகளிலிருந்தே (Home Dialysis) இரத்த சுத்திகரிப்பு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது தொற்றா நோயான சிறுநீரக நோயின் பாதிப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு வீடுகளிலேயே சுயமாக செயற்படுத்தக்கூடிய இரத்த சுத்திகரிப்பு (Home Dialysis) இயந்திரங்களை வழங்குவதற்காக 500 மில்லியன் ரூபாவுக்கான முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது இதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக இந்த இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

வீட்டிலேயே இந்த தன்னியக்க இரத்த சுத்திகரிப்பு செயற்பாடுகளை மிகவும் பாதுகாப்பாக மேற்கொள்ள முடியும். இதே போன்று இந்த வேலைத்திட்டத்தின் மூலம் 24 மணித்தியாலமும் தொடர்பு மத்திய நிலையம் மற்றும் சேவை மத்திய நிலையத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் வைத்திய குழுக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நோயாளருக்கு சிகிச்சையளிக்கப்படும் அதே வேளையில் வைத்திய உபகரணங்கள் மூலம் நோயாளர்களின் உடல்நிலையை அவதானிப்பதற்கும் வைத்தியர்களினால் முடியும்.

நேரடியாக தன்னியக்க கருவியின் மூலம் இயந்திரத்தில் தொடர்புபட்ட சிகிச்சையை பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் மற்றும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நோயாளர்களுக்கு இயந்திரத்துடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் போன்ற முக்கியமான விடயங்கள் இந்த திட்டத்துக்குட்பட்டது.

இந்த இரத்த சுத்திகரிப்பு செயற்பாட்டின் மூலம் நோயாளர்களின் வாழ்நாள் அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் நோயாளர்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலை கிடைப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நோயாளருக்காக மாதத்துக்கு 103 740 ரூபா செலவாகின்றது. இந்த வருடத்தில் இத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

## இவற்றில், உள்ளூராட்சி மற்றும் கிராமிய...

இவற்றில், உள்ளூராட்சி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, சுகாதார மற்றும் சுகாதார சேவைகள் அமைச்சு, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, வீதி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, கிராமங்களின் விசேட தேவைகள் சிறப்புச் செயற்திட்டம் ஆகியவற்றின் ஊடாக இவை முன்னெடுக்கப்படுகின்றன.

மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் இவ்வருடத்தில் நிறைவுக்கு வரும் வகையில் முன்னெடுப்புக்கள் அரசாங்க அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

## 'ஜனநாயகத்தைப் பாதுகாக்க மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்' – இரா.துரைரெத்தினம்



ஜனநாயகரீதியாக வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவிற்கும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா.துரைரெத்தினம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.
நேற்று வியாழக்கிழமை விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளிலேயெ அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'2017ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி முடிவடைந்து இரண்டு வருடங்களாகி ஆளுனர்களின் ஆட்சியில் கிழக்கு மாகாண சபை செயற்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் (சிறுபான்மையினரின்) அதிகாரம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபை முறைமையில் வடக்கு கிழக்கில் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் 12 வருடங்களே மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இருந்தது. மிகுதியாக 14 வருடங்களுக்கு மேல் மத்திய அரசாங்கத்தின் நிருவாக ரீதியாக ஆளுனரின் ஆட்சியிலேயே செயல்பட்டு வந்தது.வடக்கு கிழக்கைத் தவிர ஏனைய மாகாண சபைகளில் 28 வருடங்களுக்கு மேலாக மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சியே அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது. அம் மாகாண சபைகளில் பல நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு கூடுதலான வரிகளைப் பெற்று மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இம் மாகாண சபைகளில் மேலும் கூடுதலான அதிகாரங்கள் குறிப்பாக, மத்தியிலுள்ள அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டுமென இம் மாகாண சபைகள் குரல் கொடுத்து வருகின்றன. கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில் அதிகாரங்களை அமுலாக்குவதற்குரிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே கடந்த காலத்தில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்காலத்தில் மாகாண சபை தொடர்பாக பாராளுமன்றத்தில் சட்டவாக்கம் செய்யப்பட்ட, மாகாண சபையிலுள்ள அதிகாரங்களையும் அமுல்படுத்தப்படாமல் உள்ள அதிகாரங்களையும் அமுலாக்குவதற்கும் திட்டமிட்டவாறு அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கும் மாகாணத்தின் ஆட்சி முக்கியமானதாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# செயற்திறன் மிக்க அதிரடித் தலைமை?

இலங்கையில் தமிழர் பிரச்சினை உட்பட தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் பல காலமாக அப்படியேயே இருக்கின்றன. போதாக்குறைக்கு இந்த வருடத்தில் இங்கு ஒரு தொடர் குண்டுவெடிப்பு நடந்து, ஒரு இனத்துக்கு எதிராக சில இடங்களிலாவது தாக்குதல்கள் கூட நடந்திருக்கின்றன.

ஆனால், அங்கு நாடாளுமன்றமோ அல்லது அரசாங்கமோ அவற்றைக் கையாள்வதற்கான தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. அங்கு அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, நாடாளுமன்றத்தில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவர்களது நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்து ஆட்சியைப் பிடிப்பது யார் என்ற நோக்கில் இருக்கின்றனவே ஒழிய, இருக்கின்ற பிரச்சினைகளை எப்படி தீர்ப்பது என்பதை நோக்கியதாக இல்லை. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுவது என்பதற்கு அப்பால் அவற்றை தீர்க்கப்படாமல் வைத்திருப்பது எப்படி என்பதிலேயே அரசியல் கட்சிகள் அக்கறை காண்பிக்கின்றனவோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஏனென்றால், இந்தப் பிரச்சினைகள் வந்த பிறகு அரசாங்கத்துக்கு கொடுக்கப்படும் அழுத்தங்கள் அதனை இயங்க முடியாமல் செய்வதை நோக்கமாகக் கொண்டதாக இருக்கின்றனவே ஒழிய, அதனை செயற்திறனுடன் இயங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்ட அழுத்தங்களாகத் தெரியவில்லை.

அதில் ஒன்றுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம். அதன் முடிவுகள் எப்படியாக இருக்கின்ற போதிலும் இப்போதைய ஆட்சியை உடனடியாகக் கலைத்து, அடுத்த ஜனாதிபதி அல்லது நாடாளுமன்ற தேர்தலை உடனடியாக நடத்துவதை நோக்கமாகக் கொண்டவையாகத்தான் அவை இருக்கின்றன.

உண்மையில் இலங்கையில் அடுத்த தேர்தல்களை எதிர்கொள்வதற்காக ஏற்கனவே இரு அணிகள் ஓரளவுக்கு உருவாகிவிட்டன. ஐக்கிய தேசியக் கட்சியினர் சஜித் பிரேமதாஸவை தலைமையாகக் கொண்டு அடுத்த தேர்தலை எதிர்கொள்வது என்றும் எதிர்த்தரப்பினர் கோட்டபாய ராஜபக்ஷ அவர்களை தலைமையாக கொண்டு போட்டியிடுவது என்ற முடிவுக்கும் வந்துள்ளதாக நிலைமைகள் காண்பிக்கின்றன.

யார் தலைமை தாங்கினாலும், யார் ஜனாதிபதியாக வந்தாலும் இலங்கைக்கு இப்போதைய தேவை ஒரு செயற்திறன் மிக்க அரசாங்கம். தற்போதைய அரசாங்கத்திடம் இல்லாததும் அதுவே.

தமிழர் வாக்கு யாருக்கு, முஸ்லிம் வாக்கு யாருக்கு, சிங்கள வாக்குகளை எவ்வாறு பிரித்தெடுப்பது இதுவே இப்போதைய சிந்தனையாக அரசியல்வாதிகள் மத்தியில் இருக்கின்றதே ஒழிய இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்ற நோக்கில் எதுவும் இல்லை. இருந்ததும் இல்லை.

உண்மையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எப்போது என்பது தமிழ் மக்கள் மனதில் இருக்கும் நீண்ட நாள் கேள்வி. கிழக்குத் தமிழர் மத்தியில் இதனையும்விட "நமது எதிர்காலம் என்ன?" என்ற கேள்வியும் முன்னெழுந்து நிற்கிறது. ஆனால், இவற்றுக்கு இப்போதைக்கு தீர்வு என்பது கண்ணுக்கு தெரியவில்லை. அப்படித் தெரிகிறது என்று யாரும் சொன்னால், அது ஒரு பொய்.

ஒட்டுமொத்த இலங்கையைப் பொறுத்தவரை, பொருளாதாரம் இங்கு பெரும் பிரச்சினையாகி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. உட்கட்டுமானம், வெளிநாட்டு வருமானம், வெளிநாட்டு உறவு என்று பல விடயங்கள் அண்மைய வருடங்களில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு அவசரமான நடவடிக்கைகளும் திட்டங்களும் தேவைப்படுகின்றன. அதுவே ஓரளவுக்காவது இலங்கையை காப்பாற்றும். இல்லாவிட்டால் இலங்கை மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

தமிழர் பிரச்சினைத்தீர்வு விடயத்தில் இப்போது அரசியலில் உருவாகியிருக்கும் இரு அணிகளிடமும் தெளிவான திட்டம் கிடையாது. ஆகவே அது இப்போதைக்கு இல்லை. ஆனால், பொருளாதாரம், வெளிநாட்டு உறவு போன்ற விடயங்களிலும் நிலைமை அப்படித்தான். ஆனால், அதற்கு இந்த இரு அணிகளும் மனது வைத்தால் ஏதாவது முயற்சிக்கலாம். ஆனால் அதற்கு வரப்போகும் தலைமை செயற்திறன் மிக்கதாக இருக்க வேண்டும். ஆகவே, நினைத்தைச் சாதிக்கும் ஒரு தலைமை இங்கு தேவைப்படுகின்றது. ஓரளவுக்கு சொல்லப்போனால், அதிரடித் தலைமை இங்கு தேவைப்படுகின்றது. இது கொஞ்சம் சங்கடமான கருத்துத்தான். ஆனால், அதுவே இப்போதைக்கு இலங்கைக்குத் தேவைப்படுகின்றது.

அதனைத் தரப்போவது யாராக இருக்கும். இலங்கையின் கடந்தகால அனுபவங்களில் இருந்துதான் இதற்கு வழி கண்டாக வேண்டும்.

**சீவகன் பூபாலரட்ணம்**

# அரக்கனை அழிக்க முடியுமா?
# பகிடி வதைகள், பாலியல் தொல்லைகள், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் - 2

*செயலமர்வில் அறிஞர்கள் உரைத்தவை முதற்பகுதி*

பேராசிரியர் சி. மௌனகுரு

பல்கலைக்க்ழக மானிய ஆணைக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அக்கருத்தரங்கு பல்கலைக்கழக பகிடிவதையையும் பாலியல் துன்புறுத்தல்களியும் எப்படி நிறுத்தலாம் என்பதைச் சிந்திப்பதற்கு அடித்தளம் இடும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

பேசியவர்கள் அனைவரும் இவ்விடயத்தில் ஆய்வு செய்தவர்கள் சிலர் அனுபவம் மிகுந்த பேராசிரியர்கள்.

பேராசிரியர் உமா குமாரசாமி தலைமை தாங்கினார்.

ஆரம்ப உரையினை உயர்கல்வி அமைச்சின் செயலள்ர் திரு மாயாதுன்னை நிகழ்த்தினார். அவரது தலைப்பு பயிற்சிப்பட்டறை பற்றிய அறிமுகமாகும். அவர் தனது உரையில் அப்பயிற்சிப்பட்டறையின் உள்ளடக்கத்தை விளக்கியதுடன் பல்கலைக்கழகங்கள் இனி எத்திசையில் பயணிக்க வேண்டும் என்பதனையும் கூறினார்..அவரது பேச்சில் பின் வரும் விடயங்கள் முக்கியமானவையாக எனக்குப்பட்டன

1.பகிடிவதையை முற்றாக ஒழித்தல்

2,வராத மாணவர் வெற்றிடங்களை நிரப்புதல்

'3,பாரம்பரியப் பாட நெறியினின்றும் மாறி நிறுவன,கைத்தொழில் செம்முறைப்பயிற்சிகளுக்காக ஒரு வருடத்தை ஒதுக்குதல்

4. ஆங்கில மொழிக்கும் கணணிப்பயன்பாட்டுக்கும் முக்கிய இடம் கொடுத்தல்

5.மனித நேயம் மிக்க பாடவிதானச் செயற்படுகளைக் கொணர்தல்




6.ஒரு சில பாடங்களையாவது ஆங்கில மொழியிற் படிப்பித்தல்

7,முறையான மதிப்பீடின்றி பாடங்களை விரிவுபடுத்துவதைக் குறைத்து தற்போது காணப்படும் பாடநெறிகளைச் சர்வதேசத் தரத்திற்கொப்ப ஆழப்படுத்தல் என்பனவாம்

இவரது உரையில் ஆங்கிலக்கல்விக்கும் கணணிக் கல்விக்கும் அதிக அழுத்தம் தரப்பட்டதுடன் பகிடிவதையைத் தடுக்காவிட்டால் உங்களிடம் தரப்பட்ட பொறுப்பை நீங்கள் ஒழுங்காகச் செய்யவில்லை என்பது அர்த்தம் என்பதற்கும் அழுத்தம் தரப்பட்டது.

அவருக்கு அடுத்து உரையாற்றியவர் கலாநிதி சமளா குமார். இவர் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சிரேஸ்ட ஆராய்ச்சி இணைப்பாளர் ஆவர்

இவரது தலைப்பு Study on Ragging and Sexual and Gender based violence In the Sri Lankan Universities. இவரது உரை பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதை பாலியல் வதை என்பன பற்றிய தகவல் தரும் ஓர் நல்ல ஆய்வுரையாக இருந்து.
பகிடிவதையும் பாலியல் வதையும் நிர்வாகத்துடனும் பல்கலைக் கழக சிஸ்டத்துடனும் எமது நாட்டு அரசியலுடனும் பிணைந்து கிடக்கிறது என்று கூறீய இவர் அதற்கான ஆதாரங்களையும் பவர் பொயின்டில் முன் வைத்தார்.

பகிடி வதை பாலியல் துன்புறுத்தல் என்பது பன்முகம் கொண்டதாயுள்ளது. அதற்கான காரணங்கள் என்ன என்பதனை அவர் கிடைத்த ஆதாரங்களுடன் முன் வைத்தார்.

அடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மோஹன் டி சில்வாவின் உரையாற்றினார். அவரது தலைப்பு Present Status - Learning environment என்பதாகும் அவரது உரை மிகத்தெளிவாகவும் எளிமையாகவும் யதார்த்தமாகவும் அமைந்திருந்தது.

பகிடிவதை எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் உண்டாயினும் இலங்கையில்தான் அதன் கொடூரம் அதிகம் என்றார். பகிடிவதைகாரணமாக படிப்பை இடை நிறுத்தியோரையும் பகிடிவதைக்குப்பயந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியும் வரப்பயந்து பல்கலைக்க்ழக கல்வியைக் கைவிட்ட மாணவர்கள் பற்றியும் கூறினார்.
பகிடி வதையையும் பாலியல் துன்புறுத்தல்களையும் இல்லாமல் ஆக்கவென யுனெஸ்கோவின் உதவியுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஒரு மத்திய நிலையத்தை நிறுவியும் உள்ளது, இச்செயல் பல்கலைக்க்ழக மானிய ஆணைக்குழு இவ்விடயத்தில் எத்துணை தீவிர ஆக்கறை கொண்டுள்ளது என்பதனைக்காட்டுகின்றது என்றார்

மாணவர்கள் அனைவரும் பகிடிவதையை பாலியல் துன்புறுத்தல்களை விரும்புபவர்கள் அல்ல விரும்பாத மாணவர்கள்தான் பல்கலைக்கழகத்தில் மிகப்பெரும்பான்மை. இவர்கள் மௌனமாக உள்ளார்கள். மிகச்சிற்பான்மை மாணவர்களே பகிடி வதைகளிலும் பாலியல் துன் புறுத்தல்களிலும் ஈடுபடுகின்றார்கள், ஏனையோர் மௌனமாயிருக்கும்

தொடர்ச்சி... (பக்கம் -15)



# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்

சென்றவாரத்தில் ஊடகங்களில் அதிகம் அலசப்பட்ட விடயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுடைய 'ஆயுதம் ஏந்திப் போராடினால்தான் அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான கருமங்களைப் பெறமுடியும் என்றால் அது குறித்து சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.' என்ற உரையும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் 'மக்களை அணிதிரட்டி போராட்டங்களில் ஈடுபடுவோம்' என்ற உரையும் அமைந்திருந்தன.

தமிழர்களின் போராட்ட வரலாற்றை தமிழரசுக் கட்சியினரின் சாத்வீகப் போராட்டக் காலம் (1948 – 1983), ஆயுதப் போராட்டக் காலம் (1983 – 2009), இணக்க அரசியல் காலம் (2009 – 2019.........) என மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்கமுடியும். இவை தொடர்பாக ஆழமாக இப்பத்தியில் எடுத்துக் கூறமுடியாததால் வாசகர்களுக்கான தெளிவு கருதி மிகச் சுருக்கமாக எடுத்துக்கூறப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியினரின் சாத்வீகப் போராட்டக் காலம் (1948 – 1983), எனக் குறிப்பிடப்படும் இக்காலத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குப்பெறுவதையே தனது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றது/ வருகின்றது. ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலான தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று தமது கட்சியினை பலப்படுத்தும் பொருட்டு தமிழ் மக்களை உணர்ச்சிகர அரசியலுக்கு உட்படுத்தலானார். அதன் முதல் வெளிப்பாடே தமது கட்சிக்கு ஆங்கிலத்தில் சமஸ்டிக் கட்சி (Federal Party) என்றும், தமிழில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றும் இரு வேறுபட்ட பெயர்களைச் சூட்டியதாகும். இதன் மூலம் சிங்கள மக்களுக்கு தமது கட்சியின் கொள்கை சமஸ்டி என்றும் தமிழ் மக்களுக்கு தமது கொள்கை தனியரசு என்றும் கூறி தமிழர்களை ஏமாற்றி தம்பக்கம் இழுப்பதில் வெற்றிகண்டார்.

இந்த வெற்றியுடன் தமிழரசுக்கட்சியினரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் எல்லாம் உரிமையினைப் பெறுகின்ற தொடர்ச்சியான மக்கள் மயப்பட்ட போராட்டமாக அன்றி கட்சியின் அரசியல் நலன்சார்ந்த போராட்டங்களாகவே இருந்தன. சிங்களத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதும் ஒப்பந்தங்களைச் செய்வதும் பின்னர் அவ் ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாத போது சிங்களத் தலைவர்களை நம்பமுடியாது எனக் கூறுவதும் கட்சி மகாநாடுகளைக் கூட்டி தீர்மானங்கள் எடுப்பதும் தேர்தல்களில் போட்டியிடுவதும் பின்பு ஒப்பந்தங்கள் செய்வதும் என்ற சுழற்சி முறையிலே அன்று தொடக்கம் இன்றுவரை தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு ஒரே சுழற்சியான அரசியல் செயற்பாட்டிலிருந்து விலகி அகிம்சைப் போராட்டத்தை வன்மையான ஒரு மக்கள் போராட்டமாக முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழரசுக் கட்சியினர் துணியவில்லை.

மகாத்மா காந்தி, தனது போராட்ட வடிவங்களின் முன்னுதாரணமாக அவரே விளங்கினார். அப் போராட்டத்தினை தொடர்ச்சியான போராட்டமாகவே கொண்டிருந்தார் அதனை மக்கள்மயப்படுத்தினார். ஆனால் எமது தலைவர்களோ அரசிடமிருந்து எல்லா சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டு அவ்வப்போது தமது அரசியல் இலாபத்துக்காக மக்களைத் தூண்டி போராட்டங்களை நடத்தினரே தவிர, அகிம்சையினை தொடர்ச்சியான மக்கள்மயப் போராட்டமாகக் கொள்ளவில்லை. அகிம்சைப் போராட்டத்தை முறையாக, நேர்மையாக நடாத்த முடியாத தமிழ் தலைவர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு இட்டுச் சென்றனர். இதிலும் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்து விட்டு தாங்கள் மிக சாதுர்யமாக ஒதுங்கிக் கொண்டனர்.

எனவே 1948 தொடக்கம் 1983 வரையான 35 வருடகால சாத்வீகப் போராட்டத்தின் மூலம் தமிழ்த் தலைவர்களால் தமிழர்களுக்கு உருப்படியாக எதையுமே பெற்றுக்கொடுக்க முடியாமல் போய்விட்டது. இது போராட்டத் தலைமைகளின் வர்க்க குணாம்சம் காரணமாக தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட தோல்வியாகும்.

இதற்கு அடுத்து, ஆயுதப் போராட்டக் காலத்திற்கு (1983 – 2009), வருகின்றபோது, இக்காலத்தில் மிதவாதத் தலைவர்கள் தமிழர் அரசியல் போக்கை தீர்மானிக்கின்ற நிலையில் இருந்து முற்றாக ஒதுங்கிக் கொண்டனர் அல்லது ஒதுக்கப்பட்டனர். சாத்வீகப் போராட்டத்தில் தியாகசிந்தையுடனும் அர்ப்பணிப்புடனும் போராட்டத்தில் ஈடுபட்டு, அந்த அனுபவத்துடன் ஆயுதப்போராட்டத்துக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்கியிருப்பார்களேயானால் ஆயுதப் போராட்டத்தை நெறிப்படுத்தக்கூடியவர்களாகவும் அரசியல் விடயங்களைக் கையாளக்கூடியவர்களாகவும் இத்தலைவர்கள் இருந்திருப்பர். ஆனால் இவர்களின் சந்தர்ப்பவாதம் காரணமாக ஆயுதப்போராட்டத் தலைவர்கள் மிதவாத அரசியல் தலைவர்களை ஓரங்கட்டியதுடன் அரசியல் விடயங்களைக் கையாள்பவர்களாகவும் ஆயுதப் போராட்ட தலைவர்களும் தளபதிகளுமே இருந்தனர். திம்புப் பேச்சுவார்த்தை தொடக்கம் ஒஸ்லோ பேச்சுவார்த்தை வரை முக்கிய தீர்மானம் எடுப்பவர்களாக இருந்தவர்கள் அனைவரும் போராட்டத் தலைவர்களும் தளபதிகளுமேயாகும். இதனால் சமரசங்களுக்கூடாக தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயிற்று.

இக்காலத்திலும் மிகவும் சிரமப்பட்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமாக இலங்கை இந்திய ஒப்பந்தமும் அதன் பயனாக 13ம் திருத்தச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளும் அமைந்திருந்தன. இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாகாணசபைகளை ஏற்றுக் கொள்ளாததால் தமிழ் மக்களால் மாகாணசபைகள் மூலம் பெறக்கூடிய பயன்களைப் பெறுவதற்கு இயலவில்லை.

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை கூட புலிகளின் தவறான அணுகுமுறைகளால் சாத்தியமற்றுப் போய் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவுடன் முடிவடைந்தது.

தங்களுடைய இலட்சியத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வு குறித்தும் சமரசத்துக்கு வரமுடியாதவர்களாக புலிகள் இருந்தனர். இது அவர்களின் அகபுற அரசியல் நிலைமைகளை கவனத்தில் எடுக்காத வறட்டுவாதப் போக்காகும். இந்த நிலைக்கு புலிகள் வந்து சேர்வதற்கு தமிழரசுக் கட்சியினரின் கடந்தகால அனுபவங்களே காரணமாகும். இறுதியில் போர் முடிவுற்ற போது இருந்ததையும் இழந்த நிலைக்கே தமிழர்கள் வந்து சேர்ந்தனர்.

போர் முடிவுற்று 2009 தொடக்கம் தற்போது

**எழுவான் வேலன்**

வரையுள்ள காலத்தினை இணக்க அரசியல் காலம் எனக் குறிப்பிடலாம். தமிழர்களுக்கான அரசியல் தீர்வை ஏற்காதவர்களாக புலிகள்தான் உள்ளனர் என்ற குற்றச்சாட்டை மகிந்த அரசு சுமத்திக்கொண்டிருந்த நிலையில் புலிகள் ஒழிக்கப்பட்ட பின்னர் இந்தச் சாட்டுப்போக்கைக் கூறமுடியாது ஏதாவது ஒரு அரசியல் தீர்வை மகிந்த அரசு முன்வைக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நம்பியிருந்தனர். அத்துடன் விடுதலைப் புலிகளின் கருவிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் செயற்பட விரும்பவும் இல்லை. இதனால் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைப்பீடத்திடம் இருந்தது. இதனால்த்தான் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறந்து கொண்டிருந்த போது அந்த மக்களை பாதுகாப்பதற்கான எந்த ஒரு போராட்டத்தையும் செய்யாது வெறும் பார்வையாளர்களாக இருந்தனர். ஒரு வகையில் மகிந்த அரசினை சர்வதேசத்திடமிருந்து பாதுகாத்து புலிகளை ஒழித்து யுத்தத்தினை முடித்து வைப்பதற்கு மறைமுகமாக துணைபோயினர்.

மகிந்த அரசுக்கு சர்வதேசம் அழுத்தங்களைக் கொடுத்து தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தருவார்கள் என தமிழ்மக்களை ஏமாற்றினர். மகிந்த அரசு காலத்தைக் கடத்தியதே தவிர எதனையும் வழங்க முன்வரவில்லை. இந்த நிலையில்த்தான் மைத்திரிபால சிறிசேனா அவர்களை ஐக்கிய தேசியக் கட்சி பொதுவேட்பாளராகக் களம் இறக்கியவுடன் பெருமளவான தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேன அவர்களுக்குப் பின் அணிதிரண்ட நிலையில் வேறுவழியில்லாமல் மைத்திரிபால சிறிசேனா அவர்களை ஆதரித்து நல்லாட்சியை ஏற்படுத்தினர். நல்லாட்சியில் எதிர்க்கட்சியாகவும் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் கட்சியாகவும் இருந்து சகல சுகபோகங்களையும் அனுபவித்தனர்.

கிட்டத்தட்ட 30வருட யுத்தத்தினாலும் இயற்கை அழிவுகளினாலும் தமிழ் மக்கள் தங்களுடைய சமூக, பொருளாதார கட்டுமானங்களை இழந்து நடுத்தெருவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சுகபோகங்களை அனுபவிப்பதை விட்டு ஆளும் கட்சியில் அங்கம் வகித்து அழிவுண்ட சமூக பொருளாதாரக் கட்டுமானங்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருந்தது. ஆனால் இவைபற்றி கூட்டமைப்பு கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கதிரைகள் அவ்வாறே காலகாலமாக இருந்து வரவேண்டுமாக இருந்தால் புலி அரசியலும் புலிக்கொள்கையிலும் தாங்கள் இருப்பதாக காட்டிக்கொள்ள வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தனர்.

'மெய்யான புரட்சிக்கட்சியின் கடமை எல்லா சமரசங்களையும் கைவிடுவது சாத்தியமல்லவெனப் பிரகடனப்படுத்துவதல்ல, எல்லா சமரசங்களினூடேயும் தனது கோட்பாடுகளுக்கும், தனது வர்க்கத்துக்கும், தனது புரட்சிகர நோக்கத்தக்கும் புரட்சிக்கு வழியை செப்பனிடுதல், புரட்சியில் வெற்றிபெற மக்களுக்கு போதமளித்தல் ஆகிய தனது பணிக்கும் விசுவாசமாய் இருந்துவரச் சக்தி பெற்றிருப்பதேயாகும்' என்பார் லெனின். இன்று மக்களை அணிதிரட்டிப் போராடப் போகின்றோம் என்றும் ஆயுதப் போராட்டம் குறித்து சிந்திக்க வேண்டிய தேவை ஏற்படும் என்று கூறுபவர்கள் லெனினால் மேலே கூறப்பட்ட கடமைகள் எவற்றையாவது தமிழ் மக்களுக்குச் செய்துள்ளார்களா? என முதலில் சிந்திக்க வேண்டும்.

கூட்டமைப்பினர் புரட்சிக்கட்சியாக இருக்கவேண்டிய அவசியமில்லை மக்கள்நாட்டமுள்ள ஒரு கட்சியாக இருந்து தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் தொடர்பாகவேனும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தால் ஆயிரக் கணக்கான உயிர்களையும் உடமைகளையும் பலி கொடுத்துப் பெறப்பட்ட மாகாண சபைகளில் கிழக்கு மாகாண சபையினை முஸ்லிம்களுடைய தாயகப் பிரதேசமாக தாரைவார்த்துக் கொடுத்து கல்முனைப் பிரதேச மக்களின் அடிப்படை உரிமையினை அனுபவிப்பதற்கும் தடை ஏற்படுத்தும் அரசியலையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில்த்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவராகக் கடமையாற்றிய எரிக் சொல்கேம் அவர்கள் 'தமிழர்கள் போராட்டப் பாதைக்கும் பாராளுமன்ற வழிமுறைக்கும் இடையிலான ஒரு முறைமையைக் கண்டுபிடிக்க வேண்டும்' என மிகமுக்கியமான கருத்தொன்றை முன்வைத்திருக்கின்றார்.

தொடர்ச்சி... (பக்கம் -15)

## சொல்லத் துணிந்தேன்! 14



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும்படியான தமிழர்களின் கோரிக்கைக்கு எதிராக முஸ்லிம் தரப்பிலிருந்து ஊடகங்களுக்கு அறிக்கையிடும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆயுதமுனையில் உருவாக்கப்பட்டதாகும் என்கின்றனர். இது முழுக்க முழுக்கச் சோடிக்கப்பட்ட ஒரு பொய் ஆகும்.

1988ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளரும் பதில் செயலாளருமான காலஞ்சென்ற ரஞ்சன் விஜயரட்ண அவர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவ்வேளை அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் அப்போதைய தலைவரும் முன்னாள் நாவிதன்வெளி - அன்னமலைக் கிராம சபையின் தலைவருமான வீ. சின்னத்துரை அவர்களின் தலைமையில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் குழுவொன்று அப்போது பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய திருமதி. ரங்கநாயகி பத்மநாதனின் உதவியுடன் ரஞ்சன் விஜயரட்ணவைச் சந்தித்துக் கல்முனைத் தொகுதியிலும் (கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப்பிரிக்கும் எல்லையாகக் கொண்டு கல்முனை வடக்குக்கு என தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகு), சம்மாந்துறைத் தொகுதியிலும் (முன்னாள் மல்வத்தை கிராமசபைப் பிரதேசத்தையும் முன்னாள் நாவிதன்வெளி – அன்னமலைக் கிராம சபைப் பிரதேசத்தையும் அவற்றுடன் வீரமுனை மற்றும் வீரச்சோலைக் கிராமங்களையும் இணைத்ததான ஒரு தனியான தமிழ்ப் பெரும்பான்மை அலகு) இரு மேலதிகமான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்கித் தரும்படியான கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கு முகவரியிட்ட 22.06.1988 திகதியிட்ட மகஜரைக் கையளித்தனர். கொழும்பு திரும்பிய ரஞ்சன்விஜயரட்ண அவர்கள் அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற கே.டபிள்யு. தேவநாயகம் அவர்களினூடாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக கரவாகு (கல்முனை) வடக்கிலும், நாவிதன்வெளியிலும் இரு சுற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை (Circuit A.G.A. Division) திறப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யு, தேவநாயகம் அவர்கள் தனது அமைச்சின் 12.01.1989 திகதியிட்ட M/uA.6/89 இலக்கக் கடிதத்தின் மூலம் அம்பாறை அரசாங்க அதிபருக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். எனினும் அப்போது கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற ஏ.ஆர். மன்சூர் மற்றும் சம்மாந்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற எம்.ஏ. அப்துல்மஜீத் ஆகியோரின் அரசியல் தலையீட்டினால் அவை நடைபெறாமல் தடுக்கப்பட்டன.

பின் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலை அடுத்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் உபதலைவர் காலஞ்சென்ற கே. கணபதிப்பிள்ளை (அதிபர், கவிஞர் பாண்டியூரன், இவர் பின்னர் 1990 கலவரத்தில் காணாமல் போனார்) அவர்களின் தலைமையில் கல்முனை வடக்கில் தனியான தமிழ்ப்பெரும்பான்மை நிருவாக அலகை – உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலக வாயிலை மறித்துக் கல்முனைத் தமிழர்கள் சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். இதனால் கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் நாளாந்த அலுவல்கள் ஸ்தம்பித்தன.

இவ்விடயம் பொதுநிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவ்விடயம் பற்றி அப்போதைய பொது நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள அமைச்சர் காலஞ்சென்ற யூ.பி. விஜயகோன் அவர்கள், ஏ.ஆர். மன்சூர் (வர்த்தக கப்பல்துறை அமைச்சர்), பி. தயாரத்ன (காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சர்) அமரா பியசீலி ரத்நாயக்கா (உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்), அ. அமிர்தலிங்கம் (பா.உ), நிகால் வக்மீவெள (பா.உ), எம்.எச்.எம். அஷ்ரப் (பா.உ), ஜே. திவ்வியநாதன் (பா.உ) ஆகியோருடன் கலந்துரையாடி மேற்கொண்ட தீர்மானத்தின் படியே 12.04.1989 அன்று கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம் திறக்கப்பட்டது.

பின்னர் 28.07.1993 இல் கூடிய அமைச்சரவையினால் இலங்கை முழுவதும் நாடளாவிய ரீதியில் 28 உப அலுவலங்கள் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சு இராஜாங்க செயலாளர் என்.ஏ. ஒவடகே என்பவரால் ஒப்பமிடப்பெற்று 1993.09.03 ம் திகதியிட்ட அறிவித்தல் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட இருபத்தியெட்டு உப அலுவலகங்களில் வடக்குகிழக்கு மாகாணங்களில் வெருகல் (ஈச்சிலம்பத்தை), ஒட்டிசுட்டான், காரைதீவு, கல்முனை (தமிழ்ப் பிரிவு), கந்தளாய் ஆகியன அடங்கியிருந்தன. இதில் கல்முனை (தமிழ்ப் பிரிவு) தவிர்ந்த ஏனைய இருபத்தியேழு உப அலுவலகங்களும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. கல்முனை (தமிழ்ப்பிரிவு) தரமுயர்த்தல் அமுலாக்கம் பெறாமைக்குக் காரணம் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற எம்.எச்.எம். அஸ்ரப் (பா.உ.) மற்றும் அமைச்சர் காலஞ்சென்ற ஏ.ஆர். மன்சூர் ஆகியோரின் அரசியல் விருப்பமின்மையும் தலையீடும் ஆகும்.

12.04.1989 அன்று உருவான கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம்தான் கடந்த முப்பது வருடங்களாக இதுவரை தரமுயர்த்தப்படாமல் பெயரளவில் இயங்கி வருகிறது.

உண்மைச் சம்பவங்கள் இவ்வாறிருக்க முஸ்லிம் தரப்பினரில் சிலர் இவ் உபபிரதேச செயலகம் முப்பது வருடங்களுக்கு முன் ஆயுதமுனையில் உருவாக்கப்பட்டதென்று கூறுவதும், பிரதேச செயலகமொன்றினை உருவாக்கும் விடயம் மாகாண சபைகளின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பதைத் தெரிந்து கொண்டும் முஸ்லிம் தரப்பின் சட்ட முதுமானி ஒருவர் இவ் உபபிரதேச செயலக உருவாக்கத்துடன் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வர்தராஜப்பெருமாளின் பெயரை இவ்விடயத்திற்குள் இழுப்பதும், இந்திய அமைதி காக்கும் படையை இவ்விடயத்தோடு சம்பந்தப்படுத்துவதும் பொய்யும் தீய நோக்கங்கள் கொண்டதுமாகும்.

முஸ்லிம் தரப்பினர் தங்களது தரப்பு வாதங்களை முன்வைப்பது தவறல்ல. ஆனால் பொய்யான கூற்றுக்களையும் ஆதாரமற்ற தகவல்களையும் முன்வைப்பதையும், கல்முனை குறித்த உண்மை வரலாறுகளை மூடி மறைப்பதையும் தவிர்த்துக் கொள்வதே ஏற்புடையதாகும்.

## திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம்-2019



மயில்வாகனம் பகீரதன்,
செயலாளர்

இந்து மகா சமுத்திரத்தின் மத்தியில் முத்தென திகழும் சிவபூமி,சக்திபூமி என பெயர் கொண்டும் சக்தி வடிவிலான அன்னையின் ஆலயங்களை தன்னகத்தே சிறப்புற கோயில் கொண்டு காணப்படும் இலங்கைத் திருநாட்டில் செவ்வானம் மலரும் கிழக்கெனும் பரந்த தேசத்தில் மாசிலா மக்களோடு மீனினம் சிந்து பாடும் மட்டுமாநகரின் மத்தியின் கண்ணே, அருள் வளமும், திருவளமும் நிறைந்து விளங்கும்,செந்தமிழ் மாட்சியும்,சைவத்தின் உயர்நெறி கமழும்,தொன்மை வாய்ந்த அழகு நிறை புளியந்தீவு எனும் புண்ணிய ஷேத்திரத்தில் கல்லடித்தெரு பாஞ்சாலிபுரத்தின் பதிமேயு அரசியாம்,பன்னெடுங்காலமாக திருக்கோயில் கொண்டு பிணி பல போக்கி வரம் பல நல்கி அருள்ஜோதி வீசும்,மானிடர்களும் தெய்வமாகலாம் என்று உலகறியச் செய்த பஞ்ச பாண்டவர்களின் தர்ம பத்தினியாம் அன்னை ஸ்ரீ திரௌபதை அம்மனுக்குரிய இவ் ஆண்டிற்கான வருடாந்த சடங்கு உற்சவம் எதிர்வரும் 2019.07.09 ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் இடம்பெற்று 2019.07.19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இடம்பெறும் தீமிதிப்பு வைபவத்துடன் இனிதே நிறைவுபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய திரௌபதை அம்மன் ஆலயங்களினுள் மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் புளியந்தீவு நகரத்தின் மத்தியில் பாடுமீன் வாவிக் கரையோரம் வீற்றிருந்து “பிணி பல போக்கி வரம் பல நல்கி” அருளாட்சி செய்யும் திரௌபதை அன்னையின் ஆலய வரலாறானது பாரம்பரியமிக்கதும், நீண்ட தொன்மையை உடையதுமாகும்.
இவ்வாலய வருடாந்த திருச்சடங்கில் ஆலாத்திப் பிள்ளைகள் தெரிவு, திருக்கல்யாணம் வெட்டும் நிகழ்வு, வனவாச நிகழ்வு, தவநிலைச் சடங்கும் அதன் தார்ப்பரியத்தை உணர்த்தும் நாடக நிகழ்வு, அம்மன் மஞ்சள் நீராடல்,பூ மிதிப்பு எனப்படும் தீ மிதிப்பு என்பன

தொடர்ச்சி... (பக்கம் -15)

**காணிவிற்பனைக்குண்டு**

**திருப்பெருந்துறை கண்ணகி அம்மன் கோவில் பிரதான வீதியில் காணித்துண்டொன்று விற்பனைக்குண்டு. விலைகள் பேசித் தீர்மானிக்கலாம். தேவையானவர்கள் பின்காணும் அலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.**

**0716165785**

# உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!

அறுமக்குட்டிபோடி

அரசகரும மொழிகள் வாரம் கடந்த 01/07/2019- 05/07/2019 வரையான ஐந்து நாட்களும் இலங்கையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வாரத்தின் அங்குரார்ப்பண நிகழ்வானது கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. 'மொழியுடன் வளர்வோம் மனங்களை வெல்வோம்', 'இருமொழி கற்போம் நாட்டை காப்போம்' என்னும் தொனிப்பொருள்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரசகரும மொழிகள் வாரமானது தெரிந்தோ தெரியாமலோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அங்குரார்பணம் செய்யப்பட்டமையானது வரலாற்று பொருத்தம் மிக்க ஒரு நிகழ்வாகும். ஏனெனில் இலங்கையை உள்நாட்டு யுத்தம் ஒன்றை நோக்கி தள்ளிய காரணிகளில் ஒன்றான மொழி பிரச்சனைக்கும் பண்டாரநாயக்காவுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

இலங்கையின் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த மொழிசார் அரசியல் வரலாறு பண்டார நாயக்காவுடன் மட்டுமன்றி இலங்கையின் பல அரசியல் தலைவர்களோடு பின்னிப்பிணைந்ததாகும். 1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டத்தை எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவே கொண்டு வந்தார் என்பதே பொத்தாம் பொதுவான வரலாறாக இதுவரை இருந்து வருகின்றது. இந்த நிலையில் 1956ஆம் ஆண்டு சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டமைக்கு ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி செல்வநாயகம் போன்ற தமிழ் தலைமைகள் ஆங்கிலத்தின் மீது கொண்டிருந்த மோகமே காரணமாகும் என்று கடந்தவாரம் பாராளுமன்ற விவாதமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த உரையின் பின்னணியை ஆராயும் பொழுது அது பொய்யானதொரு குற்றச்சாட்டு இல்லையென்றே புலப்படுகின்றது. சுதந்திரத்துக்கு முற்பட்ட 1920,30 களில் ஆங்கிலேயர் அதிகமான நிர்வாக உத்தியோகங்களை இலங்கையருக்கே வழங்க தொடங்கினர். ஆனாலும் ஆங்கில அறிவுபெற்ற மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களால் மட்டுமே அந்த வாய்ப்புக்களை பயன்படுத்த முடிந்தது.

தமிழ், சிங்களம் போன்ற சுதேச மொழிகளை மட்டுமே அறிந்திருந்த மீன்பிடி, விவசாய, கூலித்தொழிலாளர்கள் போன்ற சமூக பிரிவினரை இவ்வுத்தியோகங்கள் சென்றடையும் வாய்ப்பு கிட்டவில்லை. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கக்கூடிய குடும்பப்பின்னணி கொண்டவர்களிடமே மீண்டும் மீண்டும் இவ்வுத்தியோகங்கள் சென்றடைந்து கொண்டிருந்தது.

இந்நிலைமையை மாற்றியமைக்கும் வண்ணம் சுதேச மொழிகளுக்கு அரச அந்தஸ்து கோருகின்ற குரல்கள் சமூகத்தின் கீழ்தட்டு மக்களிடம் இருந்து ஒலிக்கத் தொடங்கியது.



சுதேச மக்களின் தேவைகளில் இருந்து உருவான இக்கோரிக்கையானது சிங்களவர்களை போன்றே தமிழர்களுக்கும் அவசியமாய் இருந்தபோதும் அது தமிழ் மொழி பேசப்படுகின்ற வடகிழக்குப் பகுதிகளில் அதிக கவனம் பெறவில்லை. காரணம் வடகிழக்கின் அதிகார சக்திகளாக மக்களின் பெயரில் அரசியல் ஆதிக்கத்தை தக்கவைத்திருந்த வர்க்கத்தினர் இந்த சுயபாஷை கோரிக்கைகள் ஒரு இயக்கமாக வளர்ப்பதை விரும்பியிருக்கவில்லை.


ஆனபோதும் சிங்களப்பகுதிகளில் "சுயபாஷை இயக்கம்" என்னும் பெயரில் அது அமைப்பு வடிவம் பெற்றது. இந்த இயக்கத்தின் சார்பில் அரச சபையில் 1932 இல் ஜீகே.டபிள்யு.பெரேரா என்பவர் அரசசபை விவாதங்கள் சிங்களம், தமிழ் போன்ற மொழிகளில் இடம்பெறவேண்டும் எனும் பிரேரணையை முதன்முதலாக முன்வைத்தார். அதன் பின்னர் அரச அலுவலகங்களிலும் "சுயபாஷைகள்" உபயோகிக்கப்படவேண்டும் எனும் பிரேரணைகளும் இருவருடங்களின் பின்னர் அவராலேயே கொண்டுவரப்பட்டது. அரச சபையில் மட்டக்களப்பு அங்கத்தவராய் இருந்த எஸ்.ஒ.கனகரெட்னம் அவர்கள் 1937 ஆம் ஆண்டில் "தமிழ் பாடசாலைகளில் சிங்களமும், சிங்களப் பாடசாலைகளில் தமிழும் கட்டாய பாடங்களாக கற்பிக்கப்பட வேண்டும்" என்கின்ற பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இதனை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும், ஆசிரியர் சங்கமும் ஆதரவளித்து வரவேற்றன. ஆனால் கிறிஸ்தவப் பாதிரியான பீற்றர்பிள்ளை கடுமையாக இத்திட்டத்தை எதிர்த்து விளக்கமளித்தார். இதன்காரணமாக நன்நோக்கம் கொண்ட இத்திட்டம் கைகூடாமல் போயிற்று.

1943ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கூட இந்த சுயபாஷை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதன்காரணமாக "சிங்களம்" அரச கருமமொழியாக இருக்க வேண்டும் எனும் பிரேரணையை அரசசபையில் அவர் கொண்டு வந்தார். 1946ஆம் ஆண்டு இந்த சிங்கள மொழி மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்ட மட்டக்களப்பு வி.நல்லையா 'சிங்களமும் தமிழும் அரச கருமை மொழியாக இருக்கவேண்டும்' என்று சுட்டிக்காட்டினார். அதனை மிகச் சாதகமான சுயவிமர்சனத்துடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டார் என்பதையும் அதன் பின்னர் சிங்களம் தமிழும் என பிரேரணை திருத்தப்பட்டது என்பதும் உண்மை.

வி.நல்லையாவுக்கு ஆதரவாக எஸ். டபிள்யு.ஆர்.பண்டார நாயக்கா கூட அவ்வேளை உரையாற்றினார்.

இவற்றையெல்லாம் முழுமையாக எதிர்த்து யாழ்ப்பாணத்தின் பெருந்தலைவர் ஜீஜீ.பொன்னம்பலம் அரசசபையில் உரையாற்றினார் என்பதுதான் மிகக்கேவலமானது. "ஆங்கில மொழியையே இருசமூகங்களுக்கும் பொதுமொழியாக கொள்ளவேண்டும்" என தன் வர்க்க நலன் கருதிய கோரிக்கையை முன்வைத்து அவர் வாதிட்டார்.

தொடர்ச்சி... (பக்கம் -15)



# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## ராஜராஜ சோழனின் மகள் குந்தவை நாச்சியாராக நடித்த முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் கதை—2)*

1957அல்லது 1958 எனநினைக்கிறேன், எனக்குஅப்போது 15 வயது. நான் வந்தாறுமூலைமத்திய கல்லூரியில்படித்தகாலம், நான் அன்றைய எஸ். எஸ்.ஸி எனப்படும் 10 ஆம்வகுப்பு மாணவன். அதிலும் விடுதிமாணவன். அந்தவிடுதி பற்றி ஏற்கனவே எழுதியுமுள்ளேன். விடுதியில் ஏராளமான இஸ்லாமியமாணவர்கள் தங்கிப்படித்தனர். இவர்கள், கிழக்குமாகாணத்தின் பல திசைகளிலுமிருந்துவந்தவர்கள். விடுதியில் ஒன்றாகஇருக்கையில் அனைவரும் போட்டிக்குப் பாட்டுப்பாடுவோம். நடனமாடுவோம் பேச்சுப்பேசுவோம் கதைகள் சொல்வோம், விளையாடுவோம்

ஒரே கும்மாளம் தமிழர், இஸ்லாமியர்என்ற இனபேத நஞ்சுகள் ஊட்டப்படாத பிஞ்சுவயது. நாடகம் போடுவதும்அச்செயற்பாடுகளில் ஒன்று.

நான் எப்போதும்பிரதான நடிகனாகிவிடுவேன், எப்படி அதுவந்தது என்று எனக்குத்தெரியாது. மாணவர்கள் அனைவரும் இணைந்தும் நாடகம் போடுவோம்அல்லது பரிசளிப்பு விழாவுக்கு ஆசிரியர்கள் பழக்கும்நாடகங்களிலும் நடிப்போம்.

ஒரு நாள் எங்கள்சங்கீத ஆசிரியர் தேவசகாயம் எம்மிற்சிலரை அழைத்து நமது பாடசாலைவாசிகசாலை நிதிக்காக ஒரு நாடகம்போடுவோம் என்றார்.
நாடகம் என்ன என்பதில் ஒருஉரையாடல் நடந்தது அப்போது நம்மிற் சிலர்நன்றாக



வாசிப்பவர்களாக இருந்தோம். அச்சமயம் நான்அரு இராமநாதனின் இராஜராஜ சோழன் நாடகம்வாசித்துக் கொண்டிருந்தேன். தேவசகாயம் சேரிடம்அந்நாடகம் பற்றிக்கூறினேன், அந்நாடகநூல் எமதுபள்ளிக்கூட வாசிகசாலையில் இருந்தது.
அன்று எம்பாடசாலையில் வாசிப்பிற்கெனஓர் பாடவேளை ஒதுக்கியிருந்தார்கள், அப்பாட வேளையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மாணவர்களைஅழைத்துக்கொண்டு பாடசாலையிலிருந்தவாசிக சாலைக்குச்செல்ல வேண்டும். மாணவர்கள் அவசியம்வாசிக்கவும் வேண்டும். அப்படி வாசித்தபோது எமக்குக்கிடைத்த நூல்தான்இந்த ராஜராஜசோழன் நாடகம்.


டி கே எஸ் சகோதரர்கள் அன்றுஓர் நாடகக்கம்பனி வைத்திருந்தனர், சரித்திர நாடகம்ஒன்று போடஅவர்கள் விரும்பி எழுத்தாளர்களுக்கிடையில் ஒருபோட்டி வைத்தபோது அரு.ராமநாதன் எழுதியஇந்நாடகம் தான்முதற்பரிசு பெற்றது, இதனை டி,கேஎஸ் சகோதரர்கள்மேடை நாடகமாகநடித்தனர் அவர்களுக்குஇது பெரும்புகழ் தந்தது.

இதனைத்தான் பின்னர் திரைப்படமாக்கினர் ராஜராஜசோழனாக சிவாஜிகணேசன் நடித்திருந்தார்.

நாம் அந்தநாடகத்தை நடிக்கவிரும்பினோம்.அந்நாடகம் படித்திருந்த மாணவர்களுள் சேகுஇஸ்ஸதீனும் ஒருவர், அக்கரைப்பற்றிலிருந்து வந்து விடுதியில் இருந்துவந்த அப்பையன் வெகுஅழகான பையன், சிவந்தநிறம் பரந்தமுகம், புன்முறுவல் தவழும் வதனம், எப்போதும்வாசிக்கும் பையன்குழப்படி கிடையாது. அவன் விடுதியில்அனைவரையும் கவர்ந்திருந்தான் என்னைவிட இருவயது இளையவன்எட்டாம் வகுப்பில்படித்துக் கொண்டிருந்தான். என்னோடு மிகநெருக்கம், நான்சீனியர் டொமற்றிப்பிறிபெக்ட் வேறு.

இராஜ ராஜசோழன் நாடகத்திற்குப்பாத்திரத் தெரிவுநடைபெற்றுக் கொண்டிருந்தது. இராஜராஜசோழனுக்கு மூதூர்சிவராஜா தெரிவானார், அவர்மிக உயரமான மாணவர். கம்பீரனான தோற்றம் ராஜராஜசோழனை எதிர்த்துப் பேசும்புரட்சிக்காரனான விமலாதித்தனாக நான்தெரிவானேன்.

ராஜராஜன்மகள் குந்தவிக்கு ஒருஆள் தேவைப்பட்டது. இப்போதையப்போல அல்லஅன்று ஆண்களும்பெண்களும் சேர்ந்துநடிக்கும் வழக்கம்இல்லை எனவேகுந்தவைக்கு ஒருஅழகான ஆண் தேவைப்பட்டது. இஸ்ஸதீன்தெரிவானார்.



நாடக ஒத்திகைகள்ஆரம்பமாகின மாணவர்களான நாங்களே ஒத்திகைகளை அதிகம்பார்த்துக் கொள்வோம். அதிகமானோர் விடுதி மாணவர்களானதால் விடுதியில்இரவு இரண்டாம்படிப்பு நேரமான 8.30 தொடக்கம் 9,30 வரையான நேரத்தை விடுதிஆசிரியரான தேவசகாயம்சேர் எமக்கு நாடகம் பழகஒதுக்கித் தந்தார், இன்றைய கிழக்குப்பல்கலைக்கழகந ல்லையாமண்டபம்தான் நாம்அன்று நாடகம்பழகிய ஹால்.

தினமும் நாடகம்பழகினோம் சேரும்கலந்து கொண்டுஆலோசனைகள் வழங்கினார். விமலாதித்தன் ராஜராஜசோழனின் எல்லைப்புற நாடானவேங்கி நாட்டுஅரசனின் தம்பி, துடிப்பும் வீரமும்சுதந்திர எண்ணமும் கொண்டஇளைஞன் அவன். அவன் மீதுகாதல் கொள்கிறாள் குந்தவிநாச்சியார். இளம்வயதுக்காதல். எனினும் கப்பம்கட்ட மறுத்தமைக்காக விமலாதித்தனைச் சிறையில் அடைக்கிறான் ராஜராஜசோழன், ஒருநாள் ராஜராஜசோழன் பிறந்தநாளன்று கைதிகள் விடுவிக்கப்பட்டபோது விமலாதித்தனும் விடுவிக்கப்படுகிறான், பின்னர் கவிதைப் போட்டியில்கலந்து கொண்டு வெற்றிபெற்று குந்தவி நாச்சியாரை பரிசாகக்கேட்க ராஜராஜனும் தன்மகளைப் பரிசளிக்கிறான்.

நாங்கள் இந்தநாடகம் நடித்து14 வருடங்களுக்குப் பின்தான் ராஜராஜசோழன் படம் வெளியானது, அதில் விமலாத்தித்தனுக்கு முத்துராமனும் குந்தவிநாச்சியாருக்கு லக்சுமியும் நடித்திருந்தார்கள். துடுக்குத்தனமும் வாயாடித்தனமும் அஞ்சாமையும்நிறைந்த ஓர்இளம் பெண் இந்தக் குந்தவி




நாச்சியார். அந்தப்பாத்திரத்தை ஏற்றிருந்தார் நண்பர்இஸ்ஸதீன்.

இருவரும் தனியாகவும் ஒத்திகைபார்ப்போம் இருவரும்திட்டமிட்டு ஒருகாதல் காட்சியையும்அதில் சேர்த்துக்கொண்டோம், அன்று வெளிவந்தஏதோ ஒருசினிமாப்பாடலிற்கு இருவரும்ஆடிப்பாடிக் காதல் செய்வதாக ஒருகாட்சியை ஒத்திகைசெய்தோம். நான்கை நீட்டிப்பாட இஸதீன் அன்றையசினிமாக் கதாநாயகிகள்போலநெளிய எனஅதனை அமைத்தோம்.

அதனை நாம்செய்து காட்டியபோது அக்காட்சியைதேவசகாயம சேர்வேண்டாம் என்றுவிட்டார் நாம்மாணவர்கள் அல்லவா? காதல்பாட்டை அவர்விரும்பவில்லை. பாடலைநீக்கினலும் அதில்வரும் காதல்வசனங்களை அவர்நீக்கவில்லை.

நாங்கள் காதல்வசனங்னகள் பேசி நடித்தோம். ராஜ ராஜசோழன் நாடகம் மேடையேறியது நானும்இஸதீனும் ஏனையமாணவர்களும் வேடமிட்டு ஒப்பனைசெய்து உருமாறிமேடையில் தோன்றினோம்.

இஸதீனுக்கு பெண்வேடம் மிகபொருத்தமக இருந்தது. அழகான அந்தப்பையன் அழகானபெண்ணாகத் தோன்றினான். சேலை கட்டி, ஆபரணம்அணிந்து, முடிவைத்துஅவன் மிகமிக அழகானபெண்ணாகத்தோன்றி ஆண்கள் பெண்கள்அனைவரின் உள்ளங்களையும் பெண்தோற்றத்தாலும் தனது நளினமானபெண் நடிப்பாலும் அப்படியேகொள்ளை கொண்டுவிட்டான். குந்தவைநாச்சியார் என்றபெண் பாத்திரம் அவருக்கு பெரும்புகழ் தந்தது.

குந்தவி என்றுகூடச் சிலகாலம்சிலர் அவனைஅழைத்தனர்.அது ஒருகாலம் இஸ்லாமிய மாணவர்களும்தமிழ் மாணவர்களும்மிக நெருக்கமாக ஒருகுடும்ப பிள்ளைகள் போல இருந்தகாலம், இனபேதஎண்ணங்கள் இல்லாதுநாம் வள்ர்த்தெடுக்கப்பட்டகாலம்.

பின்னாளில் இந்தஇஸ்ஸதீன் வேதாந்திஎன்ற பெயரில்எழுத்தாளனாகி. எழுத்துஉறவினால் கவிதாஎனும் ஓர்தமிழ் எழுத்தாளியை மணந்து, அதன்பின் காலப்போக்கில் முஸ்லிம் காங்கிரஸை காலம்சென்ற தலைவர்அஸ்ரப்புடன் இணைந்து உருவாக்கி, இலங்கை அரசாங்கத்தில்ஓர் அமைச்சருமானார்.

அப்போது எங்களின்தம்பிபோல இருந்த அம்மாணவன்இப்படி ஓர்சிந்தனாவதியாக பெரும்மனிதனாக வருவான்என நினைத்திருந்தோமா? காலம் எத்தனைகாரியங்களை ஆற்றிச்செல்கிறது.

இதனைவிடச் சுவராஸ்யமானகதை மூதூரைச் சேர்ந்தஹயாத்து மூமீன் பௌத்தபிக்குவுக்கு நடித்த கதை.

அதனை அடுத்தவாரம் பதிவேன்
( தொடரும்)






விளம்பர அனுசரணை


மறைந்த கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் - திருமதி பரமேஸ்வரி சந்திரசேகரம்
ஆகியோரின் குடும்பம்







# கதிர்காமத்தில் யானை கொண்டு பாரம்பரிய கொத்துப்பந்தல் அமைக்கும் சம்பிரதாயம்.






கதிர்காமத்தில் பாரம்பரியமாக யானைகளைக்கொண்டு கொத்துப்பந்தல் அமைக்கும் சம்பிரதாயம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. இம்முறையும் நேற்றுமுன்தினம் (9)இச்சம்பிரதாயம் அங்கு சிறப்பாக பலரையும் கவரும்வண்ணம் இடம்பெற்றது. அதன்போதான படங்களைக்காணலாம்.





(படங்கள் காரைதீவு நிருபர் சகா)



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## கலைகளால் சிறப்படையும் படுவான்கரை!

கலைகளால் சிறப்படையும் படுவான்கரையைப் பார்க்கும் போது மகிழ்ச்சியளிக்கின்றது' என்கிறார் வெள்ளத்தம்பி. தமிழர்களது பண்பாடுகளையும், கலையையும் பாரம்பரியங்களையும் பேணிப்பாதுகாப்பதில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் படுவான்கரை மக்கள் என்றால் மறுப்பதிற்கில்லை. எப்போதும் சினிமாப் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பலர் மத்தியில், அதற்கு மாறாக கூத்துப்பாட்டினையே பாடி மகிழ்ச்சி கொள்பவர்கள்தான் இவர்கள். இரவு நேரங்களில் வீதியால் செல்லும் போது, சத்தமாக கூத்துப்பாட்டினையே பாடிச்செல்வர். இதனூடாக தமிழர்களின் பாரம்பரிய கலையான கூத்துக்கலையில் ஆர்வம் கொண்டிருக்கின்றனர் என்பது புலனாகிறது.

'நவீனகால ஓட்டத்தில் பல பாரம்பரிய விடயங்கள் அழிந்தும், மருவியும் செல்லும் நிலையில், இன்றும் பாரம்பரியத்தோடு படுவான்கரை மக்கள் ஒட்டியிருக்கின்றனர்.' என்று கூறிய சிற்றம்பலம், 'மாகாபாரதம், இராமாயணம் போன்றவற்றில் கூறப்படுகின்ற விடயங்களை புத்தகங்களில் இருந்து நாங்கள் கற்கவில்லை. ஆனால் இன்றும் அக்கதைகளைச் சொல்லுவேன். இதனை கூத்துப் பார்த்தன் மூலமே அறிந்துகொண்டேன்' என்கிறார்.

தமிழர்களின் கலைகளில் மிக முக்கியமான கலையாக கூத்துக்கலை பார்க்கப்படுகின்றது. இக்கூத்துக்கலையினை பழகி, ஆடி அரங்கேற்றுவதில் அதிக ஆர்வத்தினை படுவான்கரை கலைஞர்கள் செலுத்துகின்றனர். மரநிழல்களில் பழகி,



மக்கள் கூடக்கூடிய ஓரிடத்தில் அரங்கேற்றி, பின்னர், ஆலய உற்சவங்களின் போது அவற்றினை ஆற்றுகை செய்துவருகின்றனர். பெரும்பான்மையாக படுவான்கரைப்பிரதேசத்தில் இந்துமக்களே வாழ்கின்றனர். இதனால் குறைந்தது ஊருக்கொரு கோயிலாவது அமைந்துள்ளது. அக்கோயில்களில் வருடாந்த சடங்கு, திருவிழாக்கள் இடம்பெறுவதுண்டு. இதனைச்சிறப்பித்து ஆலயங்கள் தோறும் கலைநிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதில் அதிகம் கூத்துக்களே ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. இதனை பார்க்கும் போது, மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்கிறார் சிற்றம்பலம். அதேபோன்று நாடகங்களையும், நடனங்களையும் மேடையேற்றி அவற்றினை ஆற்றுகை செய்கின்றனர்.

கலைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அக்கலைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆலயங்களுக்கும் உண்டு. அவற்றினை ஆலயங்கள் செய்கின்றதா? என்ற வினாவும் வெள்ளத்தம்பி போன்றோர்களிடம் எழத்தான் செய்கின்றது. கோயில்கள் சமுகத்தினை நெறிப்படுத்துகின்ற, சமுகத்திற்கு தேவையான உதவிகளை வழங்குகின்ற நிறுவனங்களாக இருந்துள்ளன. இதனால் கோயில்களை மையமாக வைத்தே பல்வேறு செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இதனை சோழர், பல்லவர் காலங்களை ஆராய்கின்ற போது அறியமுடியும். அக்காலத்தில் சமுகநிறுவனங்களாக ஆலயங்கள் செயற்பட்டதுபோன்று தற்காலத்தில் செயற்படுகின்றதா? என்றால், முற்றாக மறுத்துவிடமுடியாது. சில ஆலயங்கள் இன்றும் கல்விக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக, கலைகளை வளர்ப்பதற்காக உதவிகளை செய்துவருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளை எல்லாக்கோயில்களும் செய்யவேண்டும். இந்நிலையில் படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள கோயில்கள் கலை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவைகளாக உள்ளன. இதனை வருடாந்தம் நடைபெறுகின்ற சடங்குகளும், திருவிழாக்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பல கோயில்களின் திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்போது, தத்தமது ஆலயங்களை மையமாக கொண்ட கலைச்செயற்பாட்டுக்குழுக்கள் கலைகளை ஆற்றுகை செய்துவருகின்றன. அவ்வாறு கலைச்செயற்பாட்டில் ஈடுபடாத கோயில்கள் தமது பிரதேசத்தில் உள்ள கலைசார் அமைப்புக்களைக் கொண்டு தமது ஆலய உற்சவங்களின் போது ஆற்றுகை செய்கின்றனர்.

இக்கலை நிகழ்வுகளை பார்வையிடுவதற்காக சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஒன்றுகூடுகின்றனர். இரவு நேரங்களிலேயே இக்கலைச்செயற்பாடுகள் நடைபெறுகின்றமையினால்,

படுவான் பாலகன்

மாலைநேரத்தில் இருந்து நிகழ்வு முடியும் அடுத்த நாள் காலைவரை கண்விழித்து பார்வையிட்டு மகிழ்ச்சிகொள்கின்ற தன்மையினையும் காணமுடிகின்றது. இதன்மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுவதுடன், தாங்களும் இதுபோன்றதொரு கலைகளில் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனையும் சிறுவர்கள் மத்தியில் பிறக்கின்றன.

கோயிலையும், கலைகளையும் பற்றி ஏன் இங்கு கூறுகின்றேன் என சிலர் சிந்தித்திருக்ககூடும். கலைகள் வளர்க்கப்பட வேண்டும். அதற்கு ஆலயங்கள் துணைபோக வேண்டும். படுவான்கரையில் கலைகள் வளர்க்கப்பட்டுக்கொண்டுதான் உள்ளன. ஆனாலும் பல்வேறு தேவைகள் இருக்கின்றமையினால், கலைசார் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது சவால்கள எதிர்கொள்கின்றனர். அவ்வாறான தேவைகள் நிறைவேற்றப்படும் போது, கலைச்செயற்பாடுகள் இன்னமும் அதிகம் முன்னெடுக்கப்படும். ஆலயத்தினை மையமாக வைத்து மேற்கொள்ளப்படும் கலைச்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் கலைசார் அமைப்புக்கள் முன்வரவேண்டும். மனஅழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களை நல்நிலைக்கு கொண்டு வருவதற்கு கலைகள் பெரிதும் உதவியாக அமையும்.

அதற்காக கிராமங்கள் தோறும், பல்வேறுமட்டத்திலும் கலைச்செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டும் எனக்கூறிய வெள்ளத்தம்பி, தேசத்துப்பொங்கலுக்கு பொங்கல் பொங்க வேண்டும் நேரம் செல்கின்றது. எனக்கூறியவனாக அவ்விடத்தினை அடைந்தார்.

---

## பசுமைச் சந்தைப்படுத்தல்

பா.நிதர்ஜன்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
வர்த்தக முகாமைத்துவப்பீடம்

மகிழ்சிகரமான சமுதாயமொன்றிற்கு தனிமனித வருமானமும் தூய்மையான சுற்றுப்புறச் சூழலும் அவசியமானதாகும். தொழிற்சாலைகள் சுற்றுப்புறச் சூழலை நல்ல முறையில் பேணுகின்ற முறைமையானது சர்வதேச அளவில் போட்டியிடுவதற்கான தரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் காட்டுகின்ற ஈடுபாடு உலக சந்தையில் அந்நிறுவனத்துக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. வளர்ச்சியடைந்து வரும் நிறுவனங்கள் உலக சந்தையில் தனி அந்தஸ்த்தினைப் பெறுவதற்கு சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக அக்கறையுடன் செயற்படுதல் வேண்டும்.

இது இரண்டு விதமான சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்கின்றது.

1 நிறுவனங்கள் தமது சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அதாவது நிறுவனங்கள் தமது தொழிற்சாலை செயன்முறையிலிருந்து சூழலுக்கு விடுவிக்கப்படும் கழிவுகள் தொடர்பிலும் அக் கழிவுகளின் தீங்கற்ற தன்மை குறித்தும் அவதானமாகச் செயற்படுதல் வேண்டும். தொழிற்சாலைகளின் கழிவுகளின் வீரியத்தை தீங்கற்றதாக மாற்றும் செயல்முறைக்கு பல புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வடிவமைத்தல் வேண்டும். இத் தொழில்நுட்பத்துக்காக ஈடுபடுத்தும் முதலீடானது விற்பனை இலாபம்



என்ற வடிவில் வாடிக்கையாளர் மூலம் நிறுவனத்துள் உட்பாயும் என நம்பலாம்.

2. தொழில்நுட்பங்களை வளர்த்தல்
நிறுவனங்களுக்கான சூழல் அவர்களது தொழிற்சாலைச் செயற்பாடுகளை சிரமமின்றி முன்னெடுக்க உதவுகிறது. இதற்காக நிறுவனங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தியில் பெரிதும் முதலிட வேண்டும்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்க நிறுவனங்கள் பொறுப்பேற்கும் பட்சத்தில் வாடிக்கையாளர்களும் இச் செயற்பாட்டில் முக்கிய பங்காளராவார்கள். அதாவது சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் நிறுவனங்களின் தயாரிப்புகளை நிராகரிப்பார்கள். சூழல் நட்புணர்வுப் பொருட்களின் பட்டியல் விலையை விட கூடுதல் விலையைக் கொடுத்து கொள்வனவு செய்யவும் முன்வருவார்கள்.

நிறுவனங்களின் சூழல் நட்புணர்வுக் கொள்கைக்கு அல்லது பசுமை சந்தைப்படுத்தலுக்கு தொண்டு நிறுவனங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை சூழல் தொடர்பான கடும் கொள்ளைகளைக் கடைப்பிடிப்பதோடு சந்தையில் காணப்படும் உற்பத்தி நிறுவனங்களின் சந்தை வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ள சூழல் தொடர்பான நிறுவனங்களின் அக்கறையை முக்கிய கடப்பாடாக கடைப்பிடிக்கத் தூண்டுகின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் இது ஒரு முக்கிய பரிணாமமாக வளர்ச்சியடைந்துள்ளது.

# மட்டக்களப்பில் உலாவந்த மண்ணெண்ணைக்கரத்தைகள்



மட்டக்களப்பில் ஒரு காலத்தில் கனம் கொண்ட தகரத்திலான தாங்கிகளை ஒற்றை மாட்டு கரத்தையில்(வண்டி) அழகுறவும் பாதுகாப்பாகவும் அமைத்து, அந்தத் தாங்கிகளில் மண்ணெண்ணையை நிரப்பி, அக்கரத்தையை எருது மூலம் இழுத்துச் சென்று மட்டக்களப்பு நகர வீடுகளின் காலடிக்கு கொண்டு சென்று பலர் மண்ணெண்ணை வியாபாரத்தை மேற்கொண்டிருந்தனர்.

அம்மண்ணெண்ணையை முகத்துவார வீதியில் அன்றிருந்த எரிபொருள் விற்பனையாளர் வை.ஜி. எட்வட் அவர்களின் (தற்போது திருமதி. ஜுடிற்லோகன் உரிமையாளர்) எரிபொருள் நிலையத்திலிருந்தும் மேலும் முகத்துவார வீதியில் எஸ்.எஸ்.எம்.சொலுக்கார் (தற்போது பி.ரி.அரசன் மகன் அசோக் உரிமையாளர்) எரிபொருள் நிலையத்திலிருந்தும் இக் கரத்தைகள் மண்ணெண்ணையை நிரப்பிக் கொண்டு தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பல பிரிவுகளுக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்தனர்.

அப்படி நடமாடும் எரிபொருள் வண்டியின் நடத்துநர்களாக இருந்தவர்கள். தாமரைக்கேணி சீனியர் லேன் (தற்போது செங்குந்தர் வீதி) இல் வசித்த 01.செபமாலை 02.அலோசியஸ். இவர்கள் இருவரும் சொலுக்காரின் எண்ணெய்க் கரத்தைகளின் விற்பனையாளர்கள் ஆவார்கள். அடுத்து

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

வை.ஜி.எட்வட்டின் விற்பனையாளர்களாக 01.சின்ன ஊறனியைச் சேர்ந்த புலவர். பூபாலப்பிள்ளை 02.விஜயபுரத்தில் வாழும் ஆ.பஞ்சலிங்கம் ஆகியோரே அக்கரத்தைகளின் விற்பனையாளர்கள் ஆவார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட கரத்தைகள் அந்தந்த நிறுவனத்துக்கே உரியதாகும்.

இவர்களுக்கு ஒருகலன் எண்ணெய் விற்றால் அறுபதுசதம் கொடுப்பனவாக கொடுக்கப்பட்டது. ஒருகலன் எண்ணெய்யின் அன்றைய விலை ஆறு




ரூபாவாகும். ஆறுபோத்தல் ஒருகலனாகும். ஒருபோத்தலுக்கு பத்துச்சதம் தரகாக கொடுக்கப்பட்டது. இதே காலத்தில் சுப்பர் பெற்றோல் கலன் பன்னிரெண்டு ரூபாய் ஐம்பது சதம். சாதாரண பெற்றோல் பன்னிரெண்டு ரூபாய் என்பதை இவ்வேளை தெரியப்படுத்துகிறேன்.

இவர்களின் ஒவ்வொரு வண்டியிலும் வெங்கலத்திலான மணிகள் கொத்துக் கொத்தாக கட்டப்பட்டிருந்தன. இவைகளை அசைத்து ஒலியெழுப்பி தங்களது வாடிக்கையாளர்களை வரவழைத்தார்கள். ஆனால் கும்மி, வசந்தம், ஊஞ்சல்பாட்டு கவிதைகளை தந்த புலவர் பூபாலபிள்ளை அவர்கள் தன் வாழ்வாதாரத்துக்காக இவ்வண்டியோடி எண்ணெய் வியாபாரம் செய்யும் போது வாடிக்கையாளர்களை வரவழைக்க தகரத்தில் குழல் வடிவத்தில் எக்காளம் ஒன்றைச் செய்து அதை ஊதியே வரவழைத்தார். இதை ஊதுவதற்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும். 1998 காலப்பகுதியில் இவர் மறைந்த இறுதிக் கடமையில் நான் அஞ்சலியுரையும் நிகழ்த்தியிருந்தேன்.

இவர்கள் தங்கள் விற்பனைக்கென மூன்று வகையான அளவுப்பாத்திரங்களை வைத்திருந்தார்கள். ஒரு போத்தல் காற்கலன் அரைக்கலன் என தகரத்தினால் அளவுகளைச் செய்து அரசாங்க சீல் பண்ணைப்பட்டு தங்கள் வண்டியின் கீழே வைத்திருப்பார்கள். இவைகளை வைத்திருப்பதற்காக கட்டப்பட்ட சாக்குக்கு "தொட்டில்ச்சாக்கு" என்று பெயர்.

கடைசியாக இம்மண்ணெண்ணைக் கரத்தையையோடி இன்று தன் வீட்டுக்கு அருகாமையில் மரக்கறி வியாபாரம் செய்யும் பஞ்சலிங்கம் அவர்களை சந்தித்தபோது ‘எந்த இடங்களுக்கு இவ்வியாபாரத்தை கொண்டு சென்று இருக்கிறீர்கள்’ என்று கேட்டபோது ‘நான் மாங்கேணி வரையும் போவேன்.’ என பதில் தந்தார். ‘1987ம் ஆண்டு மட்டக்களப்பு பொதுச்சந்தை எரிக்கப்பட்டபோது அச்சூழலில் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான் வண்டியுடன் தப்பி வந்தது கடவுள் எனக்களித்த மறுபிறப்பு. அந்நிகழ்வோடு மண்ணெண்ணை வியாபாரத்தைக் கைவிட்டு விட்டேன்’ என்றார்.

---



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-09*

சென்ற இதழில் தென்னிந்திய நடிகர்களின் சங்கமம் என்னும் உபதலையங்கத்தை தந்திருந்தேன். அதற்கமைவாக தொடர்கிறேன். தமிழ் நாட்டு திரையுலகின் ஜாம்பவன்களான பலரையும் நேசித்து, அவர்களை தன் அன்பின் ஆளுமைக்குள் வைத்திருந்தவர் இந்த இராஜதுரை. மிகத்திறமையான நாடக நடிகரும் வேலைக்காரி, நல்லதம்பி, காதல்ஜோதி போன்ற திரைப்படங்களின் கதை வசனகர்த்தாவும் முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணாதுரை; மக்களின் ஏகோபித்த பாராட்டைப்பெற்ற பராசக்தி மனோகரா மதுரைவீரன் மலைக்கள்ளன் போன்ற பலதிரைப்படங்களின் கதை வசனகர்த்தாவும் முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி; மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் முன்னாள் தமிழ் நாட்டு முதலமைச்சர்; என தமிழ்நாட்டின் மூன்று முதலமைச்சர்களின் அன்பை பெற்றவரும். அவ் அன்பை தக்கவைத்துக் கொண்டவரும் அவர்கள் மீது என்றும் அன்பை செலுத்தியவரும் தேனகம் பெற்றெடுத்த இராஜதுரையவர்கள்.



1968 இல் ஒரு இலங்கை - இந்தியத் தயாரிப்புக்காக ஜோ.ஜீ.ஜெயசீலன் அவர்கள். இராஜதுரையவர்களை அணுகி அவரை நடிக்க வைக்க முயன்று தன் கோரிக்கையை அவரிடம் வைத்தபோது அதற்கு இராஜதுரையவர்கள் மறுத்து விட்டார்! இல்லையென்றால் இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்பின் முதல் கதாநாயகனாக தேனகச்செம்மல் திகழ்ந்திருப்பார்.

கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணனால் கட்டியணைத்துப் பாராட்டப் பெற்றவர்!

நடிகர் அவ்வை டி.கே.சண்முகம் அவர்களால் அதிகம் புகழப்பட்டவர்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் சிந்தையைக் கவர்ந்த சிறந்த நண்பர்.

காதல்மன்னன் ஜெமினிகணேசன் அவர்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்.

நவரசத்திலகம் முத்துராமனோடு மிகவும் அன்னியொன்னியமாக இருந்தவர்.





இவ்வாறு தென்னிந்திய சினிமா உலகப் பட அதிபர்களுக்கும் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மிகப் பழக்கமானவர்! பரிச்சயமானவர்! இவர்களால் 'பண்புள்ளவர்' என்று பலரதும் பாராட்டையும் பெற்றவர். இவை மட்டுமல்ல விபுலானந்தா இசைக்கல்லூரி திறப்பு விழாவை முன்னிட்டு நடனத்தாரகை வெண்ணிறஆடை நிர்மலாவை மட்டுநகருக்கு வரவழைத்து நட்சேத்திர விழாவை மிக கோலாகலமாக நடத்தியும் இருந்தார்.

வஞ்சிக்கோட்டை வாலிபன் என்னும் திரைப்படத்தில் 'சாதுரியம் பேசாதடி என் சலங்கைக்கு பதில் சொல்லடி' என்ற பாடலுக்கு நாட்டியப் பேரொளி பத்மினியுடன் போட்டிக்கு நடனமாடி அன்றைய ரசிகர்களின் நினைவில் இடம் பிடித்த நாட்டிய கலாமாமணி வை.ஜெயந்திமாலா மதித்து கெளரவமளிக்கின்ற ஒருவராக இராஜதுரை திகழ்ந்தார்.



முன்னாள் பிரபல்ய நடிகர் காலஞ்சென்ற பி.யு.சின்னப்பாவின் மனைவி வாழ்க்கை நடத்த சிரமப்படுகிறார் என்று அறிந்ததும் அவர் வீடு சென்று கேட்டறிந்து தானே நேரிடையாகச் சென்று உதவிகள் செய்தார். சின்னப்பாவின் மீது மட்டுமல்ல தமிழ் கலைஞர்கள் மீதும் அவருக்கு இருக்கும் அன்பின் வெளிப்பாடு அளப்பெரியது. இவ்வாறு ஆனந்தவிகடன் ஆசிரியர் எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்கள். இராஜதுரையைப் பற்றி முன்பு குறிப்பிடும்போது ஒருதடவை இச் சம்பவத்தை குறிப்பிட்டு எழுதி இருந்தார்.

# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ணம் 2019

### விடைபெறப்போகும் 12ஆவது உலகக்கிண்ணம்

ஒரு மாத காலத்திற்கு மேலாக கிரிக்கட் ரசிகர்களை மகிழ்வித்து வந்த உலகக் கிண்ண கிரிக்கட் தொடானது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. 10 அணிகளுடன் கடந்த மே மாதம் 30ம் திகதி ஆரம்பமான 12ஆவது உலகக் கிண்ண கிரிக்கட் தொடரானது பல சாதனைகளுடனும் வேதனைகளுடனும் எதிர்வரும் 14ம் திகதியுடன் நிறைவடைய காத்திருக்கிறது.

பலம் வாய்ந்த 10 அணிகளோடு ஆரம்பிக்கப்பட்ட உலகக் கிண்ணத் தொடரில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளோடு போட்டியிட்டு லீக் சுற்றின் முடிவுகளுக்கமைய நாம் உலகக் கிண்ண ஆரம்ப கட்டுரையில் கூறியது போன்றே எதிர்பார்க்கப்பட்ட அணிகளான இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய அணிகளோடு நான்காவது அணியாக நியூசிலாந்து அணியும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன. அரையிறுதிப் போட்டிகளில் இந்தியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

#### முதலாவது அரையிறுதி

முதலாவது அரையிறுதிப் போட்டியானது இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் ஜூலை 09 அன்று மன்செஸ்டர், ஓல்ட்ராபோட் மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தமது அணியை முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். அதற்கமைய துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் மார்டின் குப்டிலின் விக்கட்டை இழந்து பின்னர் மிக நிதானமாக, குறைவான ஓட்ட வேகத்துடன் துடுப்பெடுத்தாடி பின்னர் ஓட்ட




எண்ணிக்கையை ஓரளவு உயர்த்தியது. போட்டியின் 47 ஆவது ஓவரில் நியூசிலாந்து அணி 5 விக்கட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதால் போட்டி இடை நிறுத்தப்பட்டது. பின்னர் தொடர்ந்தும் மழை பெய்ததன் காரணமாக அன்றைய நாள் போட்டி இடை நிறுத்தப்பட்டு அடுத்த நாள் தொடரப்பட்டது. மறுநாள் துடுப்பாட்டத்தை தொடர்ந்த நியூசிலாந்து அணி மீதமிருந்த 3.5 ஓவர்களில் மேலதிகமாக 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்று மொத்தமாக 50 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களை பெற்றது. நியூசிலாந்து அணி சார்பாக ரோஸ் டைலர் 74 ஓட்டங்களையும் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 67 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் புவனேஸ்வர் குமார் 3 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

240 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதலே விக்கட்டுக்களை பறிகொடுத்து இறுதியில் 49.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்து, தொடரை விட்டு வெளியேறியது. துடுப்பாட்டத்தில் ஜடேஜா 77 ஓட்டங்களையும் தோணி 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹென்றி 3 விக்கட்டுக்களையும் போல்ட் மற்றும் சென்ட்னர் ஆகியோர் தலா 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக மெட் ஹென்றி தெரிவு செய்யப்பட்டார்.

#### இரண்டாவது அரையிறுதி

இரண்டாவது அரையிறுதிப் போட்டியானது அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஜூலை 11 அன்று பேர்மிங்ஹம் மைதானத்தில் இடம்பெறுகிறது. இப் போட்டியில் வெற்றிபெறும் அணியோடு இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணி எதிர்வரும் 14ம் திகதி லண்டன் லோட்ஸ் மைதாணத்தில் பலப்பரீட்சை நடாத்தவுள்ளது.

#### அதிக சதங்கள் பெற்று ரோஹித் சர்மா சாதனை

நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத்




தொடரில் 5 சதங்களை பெற்று குறிப்பிட்ட ஒரு உலகக் கிண்ணத் தொடரில் அதிக சதங்களை பெற்ற வீரராக இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட

**யாசீர் அரபாத்**

வீரர் ரோஹித் சர்மா புதிய சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் 2015ம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் குமார் சங்கக்கார 4 சதங்களை பெற்றதே சாதனையாக காணப்பட்டது அதனையே தற்போது ரோஹித் சர்மா முறியடித்துள்ளார்;.

இத் தொடரில் அவர் இதுவரை 9 போட்டிகளில் விளையாடி 5 சதங்களுடன் 647 ஓட்டங்களை பெற்றுள்ளார். மேலும் ஒரு உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர் என்ற சாதனையை நிலைநாட்ட இவருக்கு இன்னும் 27 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில் அரையிறுதிப் பேட்டியில் 1 ஓட்டத்தை மாத்திரம் பெற்று அச் சாதனையை தவறவிட்டார். இதில் முதலிடத்தில் 673 ஓட்டங்களுடன் இந்திய அணியின் முன்னால் சாதனை வீரர் சச்சின் டெண்டுல்கர் காணப்படுகிறார். 2003ம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரிலேயே அச் சாதனையை அவர் நிகழ்த்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## றொறிங்ரனில் வெள்ளி முதல் தேசியமட்ட ஹொக்கி விளையாட்டுப்போட்டி!



இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களம் நடாத்தும் வருடாந்த தேசிய மட்ட ஹொக்கி விளையாட்டுப்போட்டி வெள்ளிக்கிழமை கொழும்பு றொறிங்ரன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலிருந்து ஒன்பது ஹொக்கி அணிகள் பங்கேற்கின்றன.

இரு நாட்கள் றொறிங்ரனில் நடைபெறவுள்ள போட்டியின் முதல்போட்டியில் கிழக்குமாகாண அணியும் தென்மாகாண அணியும் மோதவுள்ளன.

கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவான அம்பாறை மாவட்ட ஹொக்கி அணி கிழக்குமாகாணம் சார்பில் போட்டியிடவுள்ளது.

கிழக்குமாகாண அணித்தலைவர் கனகசுந்தரம் சசிகாந்த் தலைமையிலான அணியில் கழகத்தலைவர் த.லவன் உள்ளிட்ட காரைதீவு ஹொக்கிலயன்ஸ் கழக முன்னணி வீரர்களே களமிறங்குகின்றனர்.

ஹொக்கி லயன்ஸ் கழகத்தலைவர் தவராஜா லவன் தலைமையில் சிறப்பாக இயங்கிவரும் இவ்வணியினர் மூன்றாவது தடவையாக தேசியமட்டப் போட்டியில் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கென நேற்று(11) வியாழக்கிழமை காலை காரைதீவிலிருந்து விளையாட்டு உத்தியோகத்தர் பத்மநாதன் வசந்த் மற்றும் கழகத்தலைவர் த.லவன் தலைமையில் அணியினர் விசேடபேருந்தில் கொழும்பு நோக்கிப்புறப்பட்டனர். அவர்களை கழகப்போசகர் வி.ரி.சகாதேவராஜா வாழ்த்தி வழியனுப்பிவைத்தார்.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

### துவிக்கலப்புப்பிறப்புப் பிறப்பாக்கம் (Dihybrid Cross)

Mendel துவிக்கலப்புப் பிறப்புக்களைப் பயன்படுத்தி சம காலத்தில் இரண்டு இயல்புகளைப் பின்தொடர்ந்ததன் மூலம் தலைமுறையுரிமைக்குரிய தனது இரண்டாவது விதியை அடையாளங்கண்டார். இரண்டு தனித்துவமான பண்புகளுக்கு நேர்மாறான இயல்புகளையுடைய சகநுகமுள்ள (தூயவழி விருத்தியுள்ள) இரு அங்கிகளுக்கிடையே நடைபெறும் ஒருஇனக்கலப்பு பின்பற்றப்படுதல் துவிக்கலப்புப் பிறப்பு என அழைக்கப்படும். ; Mendel இன் துவிக்கலப்புப்பிறப்பின் நோக்கம், ஒரு இயல்பிற்கான எதிருருக்கள் மற்றைய இயல்பின் எதிருருக்களுக்குச் சார்பானதா அல்லது சார்பற்றதா (சுயாதீனமானதா) என்பதைக் கண்டறிவதாகும்.


Mendel மஞ்சள் - வட்டமான வித்துக்களையுடைய ஒரு தூயவழித்தாவரத்தை, பச்சை - திரங்கிய வித்துக்களையுடைய ஒரு தூயவழித் தாவரத்துடன் இனங்கலந்தார். (உரு. 6.3) இனக்கலப்பு, அனைத்தும் மஞ்சள் - வட்ட வித்துக்களையுடைய துவிக்கலப்புப்பிறப்பு F1 தாவரங்களை உற்பத்தி செய்தது. ஒருகலப்புப்பிறப்பு இனங்கலத்தல்களால் காண்பிக்கப்பட்டது போன்று மஞ்சள் வித்துக்களுக்கான எதிருரு (Y), பின்னிடைவான பச்சை வித்துக்களுக்கான எதிருருவின் (y) மேல் ஆட்சியுடையதாக (R) உள்ளதுடன் திரங்கிய வித்துக்கான எதிருரு (r) பின்னிடைவான உள்ளது. F1 கலப்புப்பிறப்புகள் இனக்கலப்பில் பின்பற்றப்படும் இரண்டு இயல்புகளுக்கு இதரநுகமுள்ளவை (YyRr). F1 கலப்புப்பிறப்புக்களுக்கிடையிலான இனங்கலத்தல் F2 சந்ததியை உற்பத்தி செய்தது.

இது உரு 6.3 இல் காண்பிக்கப்பட்டுள்ளது போன்று வெவ்வேறு தோற்றவமைப்புக்குரிய விகிதங்களை எதிர்வுகூறும் இரண்டு மாற்றுக் கருதுகோள்களுக்கு இட்டுச் செல்கின்றது.

1. இரண்டு இயல்புகள் பெற்றோர்களில் இருந்து எச்சங்களுக்கு ஒரு பொதி பொன்று கடத்தப்படக்கூடும். ஆட்சியுடைய Y மற்றும் R எதிருருக்கள் அல்லது பின்னிடைவான y மற்றும் r எதிருருக்கள் சந்ததி சந்ததியாக ஒன்றாகவே கடத்தப்படுகின்றன. இது எதிருருக்களின் சார்பான தனிப்டுத்துகை (dependent assortment) என அழைக்கப்படும். இக் கருதுகோளின் பிரகாரம், இரண்டு வகையான புணரிகள் மாத்திரமே சாத்தியமாகின்றன. அதாவது YR உம் yr உம் ஆகும். இவ்வாறு F1 சந்ததியின் தோற்றமைப்புக்குரிய விகிதம் ஒருகலப்புப்பிறப்பு இனங்கலத்தல் ஒன்றுடன் ஒத்ததாக இருக்கும்.

2. இரண்டு இயல்புகளும் (வித்தின் நிறம் மற்றும் வித்தின் வடிவம்) பெற்றோர்களில் இருந்து எச்சங்களுக்கு ஒன்றையொன்று சார்பற்ற முறையில் கடத்தப்படமுடியும். அதாவது Y எதிருரு R உடன் அல்லது r எதிருருவுடன் நேர்மாறானதாகக் கடத்தப்படமுடியும். இது எதிருருக்களின் சுயாதீன சார்பற்ற தனிப்படுத்துகை என அழைக்கப்படும்.

இக் கருதுகோள், ஒரு ஈரெதிருருத் தானத்துக்காக (bi – allele locus) நான்கு வெவ்வேறு எதிருருச் சேர்க்கைகளை எதிர்வுகூறுகின்றது. இதன்படி F1 சந்ததியிலிருந்து நான்கு வெவ்வேறு வகையான புணரிகள் உண்டாகலாம். அவையாவன: YR, Yr, yR மற்றும் லச எனும் நான்கு சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. ஆகவே ஆண் மற்றும் பெண் புணரிகளின் சேர்க்கையின்போது, F2 சந்ததியை உற்பத்திபண்ணுவதற்கு சமமான 16 (4x4) சாத்தியமுள்ள சேர்க்கைகள் உரு 3 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. போன்று 9:3:31 என்ற விகிதத்துடன் கூடிய (ஒன்பது மஞ்சள்-வட்டம், மூன்று பச்சை-வட்டம், மூன்று மஞ்சள்-திரங்கியது, ஒரு பச்சை-திரங்கியது) நான்கு வெவ்வேறான தோற்றவமைப்புக்களைக் கொடுக்கும்.




உரு 6.3: ஒரு துவிக்கலப்புப் பிறப்பில் சாத்தியமான தலைமுறையுரிமைக் கோலங்களின் மாற்று வடிவங்கள்

Mendel இன் பரிசோதனை இரண்டாவது மாற்றுக் கருதுகோளில் எதிர்வ்வுகூறப்பட்ட நான்கு தெளிவான தோற்றவமைப்புக்களை 9:3:3:1 என்ற விகிதத்தில் உற்பத்தி செய்தது. (மஞ்சள்-வட்ட, பச்சை-வட்ட, மஞ்சள்- திரங்கிய மற்றும் பச்சை-திரங்கிய வித்துகள்) இது, ஒவ்வொரு இயல்புக்கும் பொறுப்பான எதிருருக்கள், மற்றையதில் உள்ளவற்றிலுமிருந்து சுயாதீனமாகத் தனிப்படுத்தப்பட்டன என்பதைக் காண்பித்தது.

தலைமுறையுரிமைக்குரிய மெண்டலின் இரண்டாவது விதி (சுயாதீனத் தனிப்படுத்துகையின் விதி) Law of Independent assortment)

பரிசோதனைகளின் அடிப்படையில் Mendel தலைமுறையுரிமை சார்பான அவரின் இரண்டாவது விதியான சுயாதீன தனிப்படுத்துகையின் விதியை முன்வைத்தார். புணரிகளின் தோற்றத்தின்போது எதிருருக்கள் தனிப்படுத்தப்பட்டு சுயாதீனமாகச் சோடிசேருகின்றன என இவ் விதி கூறுகிறது. இதன் பெறுபேறாக, இரண்டு அல்லது அதிலும் கூடிய பரம்பரையலகுகள் மற்றையதற்குச் சார்பற்ற முறையில் தனிப்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், தற்கால அறிவின் பிரகாரம், இரண்டு: சந்தர்ப்பங்களுக்கு மாத்திரம் இந்த நிலை பிரயோகிக்கப்படக்கூடியதாக உள்ளது.

- வெவ்வேறான நிறமூர்த்தங்களில் அமையப்பெற்றுள்ள பரம்பரையலகுகளுக்கு. (அமைப்பொத்ததல்லாத நிறமூர்த்தங்களில் உள்ள பரம்பரையலகுகளுக்கு)
- அதே நிறமூர்தத்தில் தூரமாக அமையப்பெற்றுள்ள பரம்பரையைலகுகளுக்கு.

Mendel இனது பரிசோதனைகளின் வெற்றி

தொடர்ச்சி... (பக்கம் -00)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

**சென்ற வாரவிடை :**

01. $x + 5 = 11$
$x = 6$

02. $x - 7 = 5$
$x = 12$

03. $4x = 20$
$x = 5$

04. $\frac{x}{5} = 4$
$x = 20$

பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க

1. $2x + 3 = 5$
2. $3x - 1 = 11$
3. $\frac{x}{2} + 4 = 10$
4. $\frac{4x-2}{3} = 6$
5. $3 - \frac{2}{5}x = 7$
6. $2(x + 1) - 1 = 4$
7. $3(2x - 3) = 15$
8. $5(2x + 1) - 1 = 14$
9. $\frac{3(x-1)}{2} + 2 = 5$
10. $7 + \frac{5(2-3x)}{11} = 12$

01. $2x + 3 = 5$

$2x + 3 - 3 = 5 - 3$(இரு பக்கங்களிலிருந்தும் 3யைக் கழிக்க. $3 - 3 = 0$

$2x = 2$

$\frac{2x}{2} = \frac{2}{2}$

$x = 1$

02. $3x - 1 = 11$

$3x - 1 + 1 = 11 + 1 = 11 + 1$(இருபக்கங்களிலிருந்தும் 1ஐக் கூட்டுக. $-1 + 1 = 0$

$3x = 12$

$\frac{3x}{3} = \frac{12}{3}$ (இருபக்கங்களிலிருந்தும் 3ஆல் வகுக்குக $\frac{3}{3} = 1$

$x = 4$

03. $\frac{x}{2} + 4 = 10$

$\frac{x}{2} + 4 - 4 = 10 - 4$(இரு பக்கங்களிலிருந்தும் 4யைக் கழிக்க. $4 - 4 = 0$

$\frac{x}{2} = 6$

$\frac{x}{2} \times 2 = 6 \times 2$(இருபக்கங்களையும் 2ஆல் பெருக்குக. $\frac{1}{2} \times 2 = 1$

$x = 12$

04. $\frac{4x-2}{3} = 6$

$\frac{4x-2}{3} \times 3 = 6 \times 3$ (இருபக்கங்களையும் 3ஆல் பெருக்குக. $\frac{1}{3} \times 3 = 1$

$4x - 2 = 18$

$4x - 2 + 2 = 18 + 2$ (இருபக்கங்களிலிருந்தும் 2ஐக் கூட்டுக. $-2 + 2 = 0$

$4x = 20$

$\frac{4x}{4} = \frac{20}{4}$ (இருபக்கங்களையும் 4ஆல் வகுக்குக)

$x = 5$

- 5 தொடக்கம் 10 வரையுள்ள சமன்பாடுகளைத் தீர்த்து வைத்துக்கொள்ளுங்கள். அடுத்த வாரம் விடையுடன் சந்திப்போம்.

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 42

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. புணர்ச்சி என்றால் என்ன?
நிலைமொழியும் வருமொழியும் புணர்வது.

2. நிலைமொழியும் வருமொழியும் புணர்வதை எடுத்துக்காட்ட ஓர் உதாரணம் தருக.
வானம் + வில் = வானவில் (இங்கு வானம் நிலைமொழி, வில் வருமொழி)

3. என்ன அடிப்படையில் நிலைமொழியும் வருமொழியும் வரும்?
(i) உயிர் முன் உயிர் புணர்தல் அடிப்படை
(ii) உயிர் முன் மெய் புணர்தல் அடிப்படை
(iii) மெய் முன் மெய் புணர்தல் அடிப்படை
(iv) மெய் முன் உயிர் புணர்தல் அடிப்படை

4. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(i) உயிர் முன் உயிர் புணர்தல் அடிப்படை (உ-ம்) கரை + ஓரம்
(ii) உயிர் முன் மெய் புணர்தல் அடிப்படை
(உ-ம்) தரை + தோற்றம்
(iii) மெய் முன் மெய் புணர்தல் அடிப்படை
(உ-ம்) மண் + வீடு
(iv) மெய் முன் உயிர் புணர்தல் அடிப்படை
(உ-ம்) பெண் + அழகி

5. மூன்று சோடிப் புணர்ச்சி வகைகளையும் குறிப்பிடுக.
(i) அகப் புணர்ச்சி - புறப்புணர்ச்சி
(ii) இயல்பு புணர்ச்சி - விகாரப் புணர்ச்சி
(iii) வேற்றுமைப் புணர்ச்சி – அல்வழிப் புணர்ச்சி

6. அகப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : காண் + ட் + ஆன் = கண்டான். இவ்வாறு ஒரு சொல்லுக்குள்ளேயே புணர்வது அகப் புணர்ச்சி எனப்படும்.

7. புறப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : கண் + நீர் = கண்ணீர். இவ்வாறு சொல்லுக்கு வெளியே அதாவது சொல்லும் சொல்லும் புணர்வது புறப் புணர்ச்சி எனப்படும்.

8. இயல்பு புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : மணல் + வீடு = மணல்வீடு
பால் + ஆடை = பாலாடை

9. விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : கீரை + கறி = கீரைக்கறி - தோன்றல்
கல் + குவியல் = கற்குவியல் - திரிதல்
நீலம் + மேகம் = நீலமேகம் - கெடுதல்

10. வேற்றுமைப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : கல் + எறிந்தான் = கல்லெறிந்தான் (வேற்றுமை உருபு வெளிப்படாமல் புணர்ந்தது)
கல்லால் + எறிந்தான் = கல்லாலெறிந்தான் (வேற்றுமை உருபு வெளிப்பட்டுப் புணர்ந்தது)
☐ இரண்டாம் வேற்றுமை தொடக்கம் ஏழாம் வேற்றுமை வரையுள்ள ஆறு வேற்றுமைகளின் உருபுகள் வெளிப்படாமலோ வெளிப்பட்டோ புணர்வது)

11. அல்வழிப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக.
உ-ம் : ஏவு + கணை = ஏவுகணை (வினைத்தொகை)
வந்த + மனிதன் = வந்த மனிதன் (பெயரெச்சத் தொடர்)
☐ இவ்வாறு வேற்றுமை அல்லாதவழி புணர்வது)

12. உயிர் முன் உயிர் புணரும் போது வரும் மெய் எவ்வாறு அழைக்கப்படும்?
உடம்படுமெய் என்று அழைக்கப்படும்.

13. உடம்படுமெய்களைக் குறிப்பிடுக.
ய், வ்.

14. யகர உடம்படுமெய் வருவதை எடுத்துக்காட்டுக.
அலை + ஓசை = அலையோசை

15. வகர உடம்படுமெய் வருவதை எடுத்துக்காட்டுக.
விலா + என்பு = விலாவென்பு

## விஞ்ஞானம்

தொடர்ச்சி...

தன்னுடைய பரிசோதனைகளில் Mendel ஓர் விஞ்ஞான முறையைப் பின்பற்றினார். தலைமுறையுரிமையின் இரண்டு அடிப்படையான தத்துவங்களின் சிக்கலை அவிழ்ப்பதற்கு அவரின் பரிசோதனைகளில் இருந்த பின்வரும் சிறப்பம்சங்கள் அவருக்கு உதவின.

- தரப்பட்ட எந்தவொரு வகையினதும் ஆயிரக்கணக்கான பிறப்புரிமையியற் கலப்புக்களை Mendel மேற்கொண்டார். இது சாத்தியமான எதிர்வுகூறல்களை அவரின் பெறுபேறுகள் மிக நெருக்கமாக ஒத்திருப்பதற்கு வழிகோலியது. பொதுவாக, சாத்தியமானது என்ற நிலையின் அடிப்படையில் மாதிரியின் பெரியதான அளவு, எதிர்வுகூறப்பட்ட பெறுமானத்துக்கு அண்மையான பெறுபேறுகளைக் கொடுத்தது.
- அவரின் பெறுபேறுகளின் மிகச் சரியான பதிவுகளை அவர் பேணினார். இந்தப் பதிவுகள் கோலங்களைப் பின்பற்றுவதற்கு அவருக்கு உதவின. அல்லாதுவிடின் அவை அவரால் கவனிக்கப்படாமல் போயிருக்கலாம்.
- பொதுவாக, அவர் குறைந்தது எச்சங்களின் இரண்டு சந்ததிகளுக்கு (F1 மற்றும் F2) ஒவ்வொரு இனக்கலப்பையும் பின்பற்றினார். F1 சந்ததியில் மறைக்கப்பட்டிருந்த சில இயல்புகளைக் கண்டுபிடிப்பதற்கு இது அவருக்கு உதவியது.
- அவர் பெறுபேறாகக் கிடைத்த தோற்றவமைப்புக்களின் அளவுரீதியான பகுப்பாய்வை (quantitative analysis) மேற்கொண்டார்.

பிறப்புரிமையியலுக்குரிய பிரசோதனைகளுக்கு தோட்டப்பட்டாணித் தாவரத்தில் காணப்படும் விரும்பப்படுகின்ற பண்புகள்

தலைமுறையுரிமைக் கோலங்களைக் கற்றுக்கொள்வதற்கு ஒரு பொருத்தமான அங்கியாக விரும்பப்படும் பின்வரும் பண்புகளை தோட்டப்பட்டாணித் தாவரங்கள் (Pisum sativum) கொண்டு காணப்படுகின்றன.

- நேர்மாறான இயல்புகளுடன் கூடிய பல பேதங்களில் பட்டாணித் தாவரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.
- அவற்றின் பரம்பரைக்காலம் குறுகியது.
- ஒவ்வொரு இனக்கலப்பிலும் ஒரு பெரும் எண்ணிக்கையான எச்சங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.
- தாவரங்களுக்கிடையிலான இனக்கலப்பை நெகிழ்வுக்கிடமின்றிக் கட்டுப்படுத்தலாம் (தன் / அயன்மகரந்தச்சேர்க்கை)

நிகழ்தகவு விதிகளும் (Probability laws) மென்டலினது தலைமுறையுரிமையும்:

Mendel இன் தனிப்படுத்துகை விதி மற்றும் சுயாதீன தனிப்படுத்துகை விதி ஆகியன, நாணயச்சுழற்சி, தாயக்கட்டை உருட்டல், ஒரு சீட்டுக் கட்டில் இருந்து சீட்டுத்தாள்களை இழுத்தெடுத்தல் போன்றவற்றுக்குப் பிரயோகிக்கப்படுகின்ற நிகழ்தகவின் அதே விதிமுறைகளைப் பிரதிபலிக்கின்றன. சாத்தியமான பெறுபேறுகளின் எண்ணிக்கையிலிருந்து எவ்வாறு ஒரு நிகழ்வு நடந்தேறலாம் என்பதை நிகழ்தகவு (probability) அளவிடுகிறது. ஆர்வம் செலுத்தப்படும் நிகழ்வுகளின் எண்ணிக்கையை சாத்தியமான மொத்தப் பெறுபேறுகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் அது கணிக்கப்படுகின்றது.

1) நிகழ்தகவு அளவுத்திட்டம் (probability scale) 0 இல் இருந்து 1 வரையிலான வீச்சை உடையது. நிச்சயமாக நடந்தேறும் எனக் கருதப்படும் ஒரு நிகழ்வு, நிகழ்தகவு 1 ஐக் கொண்டுள்ள அதேவேளை, நிச்சயமாக நடந்தேறாது எனக் கருதப்படும் ஒரு நிகழ்வு, நிகழ்தகவு 0 ஐக் கொண்டது.

- ஒரு ஒருகலப்புப்பிறப்பின்(ஒற்றைக்கலப்புப்பிறப்பின்) இதரநுகமுள்ள F1 தாவரமொன்றில் எதிருருக்களின் தனிப்படுத்துகையின்போது,
- ஆட்சியுள்ள எதிருருவைக் காவுகின்ற ஒவ்வொரு முட்டையினதும் நிகழ்தகவு = ½
- பின்னிடைவான எதிருருவைக் காவுகின்ற ஒவ்வொரு முட்டையினதும் நிகழ்தகவு = ½

2) ஒரு நிகழ்விற்கான சாத்தியமான எல்லாப் பெறுபேறுகளினதும் நிகழ்தகவுகள் கூட்டப்பட்டு 1 ஆக்கப்படும்.

இதரநுகமுள்ள ஒரு F1 தாவரத்தில் எதிருருக்கள் தனிப்படுத்தப்படும் பொழுது, எல்லா நிகழ்வுகளினதும் நிகழ்தகவு (ஆட்சியான மற்றும் பின்னிடைவான எதிருருக்கள் அடங்கலாக = ½ + ½ =1

3) ஒரு நிகழ்வின் இடம்பெறுகை, மற்றொரு நிகழ்வின் இடம்பெறுகையைப் பாதிக்காது இருக்கும்பொழுது (சுயமான நிகழ்வுகள்), இரண்டு நிகழ்வுகளினதும் சமகால இடம்பெறுகையின் நிகழ்தகவை, ஒரு நிகழ்வின்(event) நிகழ்தகவை(probability) மற்றைய நிகழ்வின் நிகழ்தகவினால் பெருக்குவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இது பெருக்கல் விதி (Multiplication Rule) அல்லது நிகழ்தகவில் விளைபொருள் விதி (Product rule in probability) என அழைக்கப்படும்.

Mendel இன் ஒருகலப்புப்பிறப்பு இனக்கலப்புக்களில(Monohybrid crosses). ஒரு F2 தாவரம் திரங்கிய வித்துக்களைக் கொண்டிருப்பதற்கு, சேர்க்கையடையும் முட்டை மற்றும் விந்து ஆகிய இரண்டும் கட்டாயம் r எதிருருவைக் காவுதல் வேண்டும்.

ஒரு ச ஐக் காவும் ஒரு முட்டையின் நிகழ்தகவு ஞ ½
ஒரு ச ஐக் காவும் ஒரு விந்தின் நிகழ்தகவு ஞ ½
கக்கட்டலின்போது ச எதிருருக்களைக் காவும் இரண்டு புணரிகளினதும் நிகழ்தகவு ஞ ½ ½ ஞ ¼

4) இரண்டு அல்லது அதிலும் கூடிய, ஒன்றுக்கொன்று சார்பற்ற நிகழ்வுகளின் ஏதாவது ஒன்றின் நிகழ்தகவு, அவற்றின் தனிப்பட்ட நிகழ்தகவுகளைக் கூட்டுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது. இதுவே கூட்டல் விதி (Addition rule) அல்லது நிகழ்தகவின் தொகை விதி (Sum rule of probability) ஆகும்.

இதரநுகங்களை உற்பத்திசெய்வதற்கு சாத்தியமுள்ள ஒத்திசைவுள்ள தனக்கேயுரித்தான இரண்டு வழிகள் உண்டு

i ஆட்சியான எதிருரு முட்டையிலிருந்து வருகின்றது. அத்துடன் பின்னிடைவான எதிருரு விந்திலிருந்து வருகின்றது.
நிகழ்வின் நிகழ்தகவு ஞ ¼ (மேலேயுள்ள 3 வது வாக்கியத்திலுள்ள உதாரணத்தின் பிரகாரம்)

ை முட்டையிலிருந்து பின்னிடைவான எதிருருவும் விந்திலிருந்து ஆட்சியான எதிருருவும் வருகின்றது.
நிகழ்வின் நிகழ்தகவு ஞ ¼(மேலேயுள்ள 3 வது வாக்கியத்திலுள்ள உதாரணத்தின் பிரகாரம்)

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின்.......

சொல்கேம் அவர்களுடைய கருத்து தமிழர்களின் போராட்ட வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்ட ஒன்றாகும். தமிழர்களின் இந்தப் போராட்ட வரலாறு என்பது யாழ் உயர் வர்க்க நலன்சார்ந்த வரலாறேயாகும். அதே வர்க்க நலன்சார்ந்த தலைமைத்துவத்துடன் ஒரு வழியல்ல ஆயிரம் வழிகள் கண்டுபிடித்தாலும் சாதாரண தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் சமூக, பொருளாதார அபிவிருத்தியையும் அடைவது சாத்தியமானதல்ல. எனவே தமிழர்கள் சரியான மக்கள் தலைமைத்துவத்தினை அடையாளம் கண்டு அத்தலைமைத்துத்துடன் சேர்ந்து புதிய வழிமுறையைக் காண்பதற்கு முயல்தல் வேண்டும்.

தொடர்ச்சி...

## அரக்கனை அழிக்க.......

பெரும்பான்மையினர் ஆவர். இப்பெரும் பான்மை நல்லவர்களைப் பேசவும் இயங்கவும் செய்ய வேண்டும் என்றார்.

தனக்கு நேரடியாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளான மாணவிகள் எழுதிய கடிதங்களிருந்து மனதைத்தொடும் சில வரிகளை எடுத்துக் கூறினார்.

பகிடி வதையும் பாலியல் வதையும் செய்யும் மாணவர்களுக்கு எதிராக இரண்டு விதமான நடவடிக்கைகள் உள்ளன. ஒன்று சட்டரீதியான நடவடிக்கை அதற்குச் சட்டத்தில் இடம் உண்டு, இன்னொன்று பகிடிவதையும் பாலியல் வதையும் செய்து கொண்டிருக்கும் மாணவர்களுடன் பல்கலைக்ழக நிர்வாகமும் ஆசிரியர்களும் ஒரு நேரடி உரையாடலை நடத்துதல்.
உரையாடலை நடத்த பல்கலைக்கழகங்கள் அந்தக்குழுவில் நியமன கவுன்சில் உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ளலாம். அனுபவம் மிகுந்தமுதியோரின் அனுபவங்களும் ஆலோசனைகளும் இவ்விடயத்தில் பெறப்படல் நிர்வகத்திற்கு மிக உதவியாக இருக்கும் என்றார்.

அடுத்துப்பேசிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவரான பேராசிரியர் பி.எஸ். எம் குணரத்தின Present Status-Learning environment எனும் தலைப்பில் உரையாற்றினார். அவரது உரை பல்கலைக்கழக மாணவர்களின் வேலையில்லாப் பிரச்சினையை மையம் கொண்டிருந்தது. மிகச்சுவராஸ்யமாகவும் பிரயோசனமாகவும் பல தகவல்களைத் தருவதாகவும் அமைந்திருந்த அந்த உரையின் சாராம்சத்தையும் அவரைத் தொடர்ந்து உரையாற்றியோரின் கருத்துக்களையும் அடுத்த கட்டுரையில் பதிவேன்

(தொடரும்)

தொடர்ச்சி...

## கல்முனை விவகராக.........

நாயகம் வண.கலகொடஅத்தே ஞானசார தேரர் மேற்படி உறுதிமொழியை வழங்கி பிரீத் ஓதி நிறைவு செய்திருந்தார்.

அதன்படி அவரது ஒரு மாதகாலம் என்ற உறுதிமொழியை நிறைவேற்ற இன்னும் 10 தினங்கள் எஞ்சியிருக்கின்றன.

அரசாங்கம் அதனைத்தரத் தவறினால் அவரே வந்து மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை கல்முனையில் ஆரம்பிக்கவிருப்பதாவும் கூறியிருந்தார்.

இதனிடையே கடந்த 7ஆம் திகதி கண்டிக்கு சென்ற கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர் மற்றும் மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் வண. ஞானசார தேரரைச் சந்தித்து கல்முனை விவகாரத்தை ஞாபகமூட்டியுள்ளனர். தாம் உள்நாட்டலுவலகள் மாகாணசபைகள் அமைச்சருடன் இதுதொடர்பாக பேசியுள்ளதாக அவரால் அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

எது எப்படியிருந்தபோதிலும் ஞானசார தேரரின் வாக்குறுதியை பெரிதும் நம்பி நிச்சயம் தீர்வு கிடைக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்பில் கல்முனைவாழ் தமிழ் மக்கள் பலர் இருப்பதாத் தெரிகிறது.

உண்ணாவிரதியாகவிருந்த கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் கூறுகையில்:

'நாம் உயிரைப் பணயம் வைத்து எமது மக்களுக்கான உரிமையைப் பெறும் நோக்கில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தோம். அமைச்சர்குழு 3 மாதம் அவகாசம் தந்தது. ஞானசாரதேரர் 1 மாதம் தந்தார். எமக்கு 1 மாதம் சரியாகப்பட்டது. அதை நம்புகிறோம். பொறுத்திருந்து பார்ப்போம்.

கணக்காளர் நியமிப்பதாக இடையில் ஒரு கதைவந்தது. அதற்கேற்ப ஒருவர் வந்தார், சென்றார். இன்று அதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் மூச்சுக்கூட விடுகிறார்களில்லை. இவர்களையா நம்புவது? அரசியல்வாதிகள் குழப்புவதில் குறியாகவுள்ளனர்.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் தமது வேலையைத் தொடர்வார்கள். அது தவிர்க்கமுடியாதது' என்றார்.

உண்ணா விரதியாகவிருந்த வண.சங்கரத்ன தேரர் கூறுகையில்:

'தமிழ்மக்கள் பாவம். தொடர்ச்சியாக ஏமாற்றப்படுக்கொண்டு வருகிறார்கள். இடையில் கணக்காளர் என்றவொரு குறுந்திரைப்படத்தை ஓட்டினார்கள். இன்று தேசியம் சர்வதேசம் என்று கூறி கல்முனைப் பிரச்சினையை ஏறெடுத்தும் பார்க்கிறார்களில்லை. எனவே பௌத்ததேரரை நம்பாமல் என்ன செய்வது? வேறு யார் எமக்கு அப்படி வந்து செய்து தருகிறேன் என்று ஆணித்தரமாக கூறியது? பொறுப்போம். நல்லது நடக்கும்' என்றார்.இப்படியான சூழ்நிலையில் தமது நீண்டகாலக் கோரிக்கை மீண்டும் கிடப்பில் போடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் கல்முனைப் பகுதியில் வாழும் பலர் மத்தியில் காணப்படுகின்றது.

குறிப்பாக தீர்வு எதுவாக இருந்தாலும் அதனை உடனடியாக கண்டுவிடவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அந்தப் பகுதியில் இனப்பதற்றத்துக்கு அது காரணமாகிவிடும் என்றும் பலரும் கூறுகிறார்கள்.

தொடர்ச்சி...

## திரௌபதை அம்மன்.........

வருடா வருடம் இவ்வாலய உற்சவத்தை சிறப்பிக்கும் நிகழ்வுகளாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தீமிதிக்கும் பக்த அடியார்கள் இரண்டு நாட்களுக்கு முன்பதாக காப்பு கட்டி கோவிலில் விரதம் இருந்து, முற்றாக வீரக்கொல்லி படுக்கையினால் தீ மூட்டப்பட்ட பதினெட்டு (18) அடி நீளமும் மூன்று (3) அடி அகலமும் அரை (1/2) அடி ஆழமும் உள்ள தீக் குழியில் தங்களது நேர்த்தியை நிறைவு செய்ய வேண்டும் என்பது; இவ்வாலய உற்சவ வரலாற்றில் தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் உயர்ந்த சைவ மரபும் விழுமியமும் என்றால் அது மிகையில்லை.
இவ்வாலய தீமிதிப்பு வைபவத்தில் ஆண்கள் மாத்திரமே பங்கு கொண்டு தங்களது நேர்த்தியை நிறைவு செய்ய முடியும். மாறாக பெண்கள் தீமிதிக்க இவ்வாலயத்தில் அனுமதிக்கப்படுவதில்லை.

இவ்வருடத்திற்கான வருடாந்த சடங்கு உற்சவம் சிறப்பாக நடைபெற அன்னை ஸ்ரீ திரௌபதை அம்பாளின் திருவருள் கிடைத்துள்ளதால் அடியார்கள் அனைவரும் வருகை தந்து வருடாந்த சடங்கினை சிறப்பித்து அம்பாள் தரிசனத்தில் அருள்பெற்று இவ்வுலகில் இப்பேறு கிடைத்தது என எண்ணி வாழ்வாங்கு வாழ வேண்டுகின்றோம்.

தொடர்ச்சி...

## உன்னைச்சொல்லி............

ஜீ.கே.டபிள்யு.பெரேரா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யு.ஆர். டீ.பண்டாரநாயக்கா, மட்டக்களப்பு நல்லையா, டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா, தஹாநாயக்கா, டி.பி.ஜாயா, மட்டக்களப்பு எஸ்.ஓ.கனகரெட்னம் போன்ற மூவினத்தைச் சேர்ந்த தலைவர்களும் சுயபாசைகளை அரசகரும மொழியாக்குவதில் அக்கறை கொண்டு செயற்பட்டனர்.

இவர்கள் எல்லாம் ஒருமித்து தேசிய பாஷைகளை அங்கீகரிக்க ஆதரவு தருகையில் யாழ்ப்பாண உயர்வர்க்கத்தினுடைய பிரதிநிதியாய் "ஆங்கிலம் மட்டும்" என்கின்ற மொழிக்கொள்கையில் விடாபிடியாய் நின்றவர் ஜீஜீபொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களுமாகும்.

இத்தகைய ஆங்கில மோகம்கொண்டோரின் எதிர்ப்புகளை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு சுதந்திரம் அளிக்கப்படும் வரை ஆங்கிலேயர் அரச கரும மொழியாக ஆங்கிலத்தையே தொடர்ந்து பேணினர். ஆனால் சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் சிங்களப்பகுதிகளில் ஆங்கில எதிர்ப்பு அதிகரித்தது. ஆங்கிலத்தை அரச கரும மொழி அந்தஸ்த்தில் இருந்து அகற்றியாக வேண்டுமென்னும் கோரிக்கையே அரசியல்வாதிகளுக்கு முன் வைக்கப்படும் நிபந்தனையாக மாறியது. இறுதியில் தென்னிலங்கையில் சுடர்விட்ட சுயபாஷைகளுக்கான இயக்கம் தமிழை விடுத்து சிங்களத்தை மட்டுமாவது அமுல்படுத்தும் இயக்கமாக குறுகியது. பண்டார நாயக்கா 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றால் சிங்களத்தை அரசகட்டிலில் மீண்டும் ஏற்றுவேன் என உறுதியளித்து வாக்குகோரினார். அதேபோல அவர் வெற்றியடைந்து பிரதமரானவுடன் சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கும் சட்டத்தை நிறைவேற்றினார். ஆனாலும் தமிழ் மொழி பேசும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழே பிராந்திய மொழியாக இருக்கும் என்பதையும் உப சரத்தாக அச்சட்டம் கொண்டிருந்தது.

ஆக உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!

தொடர்ச்சி...

## ஒரு லட்சத்துக்கும்........

அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. அதில் 1,500 பெண்களும் 85,000 ஆண்களும் உள்ளடங்குவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மூன்று இலட்சம் வரையானோர் கஞ்சா பயன்படுத்துவது இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன் அதில் 1,500 பேர் பெண்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைய நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அதிரடி தேடல்களில் போதைப்பொருள் தொடர்பிலான சந்தேகத்தின்பேரில் 40,846 பேர் கடந்த ஆறு மாத காலத்திற்குள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 3,500 கிலோகிராம் சட்டவிரோத போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஹெரோயின் 1029 கிலோகிராம், 997 கிராம்,,170 மில்லிகிராமுடன் 20309 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கஞ்சா 2378 கிலோகிராம், 950 கிராம், 381 மில்லிகிராமுடன் 20015 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்த கைது செய்யும் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு நாளாந்த போதைப்பொருள் விநியோகத்தை தடை செய்து, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கென பிரத்தியேக பிரிவொன்றும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நிறுவப்பட்டுள்ளது.

மேலும் நாட்டினுள் போதைப்பொருள் ஊடுருவும் அனைத்துவிதமான முறைகளையும் கண்டறிவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் ஒழிப்புக்காக தற்போது மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு அதற்கு உகந்தவாறு மது வரி சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு,,எதிர்வரும் வாரத்திற்குள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa